


மர்ம எதிரி!
இரட்டை வேட்டையர் சாகஸ்


டி.வி நிகழ்சசிகளில் பங்கேற்கும் திறமையான ஸ்டண்ட் நடிகர்களாக மக்களுக்கு அறிமுகமாயிருந்த இளைஞர்கள் டிரேக்கும் ஜார்ஜும் உண்மையில் SI-6 உளவுப் படையின் இரகசிய உளவாளிகளாவர். பீட்டோவின் சதித் திட்டத்தை முறியடித்துவிட்டு, ஆப்பிரிக்க நாடான ஜானுவிலிருந்து அவர்களிருவரும் தாயகம் திரும்பிவந்த சில தினங்களுக்குப்பின் டி. வி. நிகழ்ச்சிக்காக ஒரு படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது.





இந்த விசைப் படகு மணிக்கு எண்பது மைல் வேகம் செல்லக்கூடியதாம்!
...சோதித்துப் பார்த்து விட்டால் போயிற்று -இதோ!
40
40
RP


இந்த குரோனோமீட்டர் கைக்கடிகாரத்தின்படி அடுத்த இருபதாவது விநாடியில் நாம் படகிலிருந்து குதித்து நீந்தி விலகிச் செல்கிறோம்...முப்பதாவது வினாடியில் படகில் இருக்கும் வெடி மருந்து தீப்பற்றிக் கொண்டு பெரும் வெடி விபத்து ஒன்று நிகழ்கிறது! நாம் நீந்தித் தப்ப இடைப்பட்ட பத்து வினாடிகள் போதுமானது!
ஜார்ஜ்... அங்கே பார் - தொலைந்தோம்
இன்னொரு விசைப் படகு! நேரம்காலம் தெரியாமல் நம் பாதையின் குறுக்கே வருகிறார்கள் - வேகத்தை மட்டுப்படுத்து... அல்லது திசை திருப்பு-ஏதாவது உடனே செய்!
ஏதும் செய்வதற்கில்லை ஜார்ஜ்! மோதலைத் தவிர்த்துக் கொள்ள போதிய அவகாசமோ, இடைவெளியோ இல்லை.



ஆனால் ஒரே ஒரு வாய்ப் பிருக்கிறது... அங்கே மிதக்கும் கட்டைகளை குறி வைத்து ..
குறி வைத்து?


...இப்படி மேலெழும்பி, பறந்து...



...இதோ-தாண்டி வி...ட்...டோ...ம்!
40
40
20
20



வெடிமருந்து தீப்பற்றிக் கொண்டுவிட பத்தே விநாடிகள்தான் பாக்கி-குதி!
முடிந்தவரை தொலை தூரம் நீந்திச் சென்று விடவேண்டும்!
தாங்காதுடா சாமி...! இனி இம்மாதிரி ஆபத்தான காட்சிகளுக்கெல்லாம் 'டூப்' போடச் சொல்லிவிடவேண்டியதுதான்!
அப்படியில்லை டிரேக்! அந்த விசைப் படகு நம் பாதையில் குறுக்கிடும் என்கிற விஷயத்தை அவர்கள் நமக்கு முன்கூட்டியே தெரிவித்து இருந்தால் நாம் வீணாக கலவரமடைந்திருக்கத் தேவையில்லாது போயிருக்கும்!
டமடமால்!




கரைக்கு வந்து படப்பிடிப்புக் குழுவினரோடு சேர்ந்து கொண்டனர்...
ஜேஸன்... உங்களுடைய விஷமம்தானே அது- நிஜத்தைச்சொல்லிவிடு!
டைரக்டர் என்ற முறையில் அந்தக் காட்சியை அப்படியே வைத்துக் கொண்டுவிடத் தீர்மானித்துவிட் டேன்–ஊஹூம்... அப்படிப் பார்க்காதே! நான் செய்த ஏற்பாடல்ல அது-





ஸாரி மிஸ்டர் டிரேக்! அந்த இடையூறுக்கு நானதான் காரணம்... உங்களிருவரையும் சந்திக்க எண்ணி படப்பிடிப்பு நடந்து கொண் டிருக்குமிடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தேன்... அப்படி யொரு நெருக்கடி நேரிட்டது துரதிர்ஷ்ட வசமானது! நான உங்கள் பரம ரசிகன்... தெரியுமோ? ஹாஹ் ..ஹா!
நீ யாராக இருந்தாலும் எனக்கு அக்கறையில்லை வெறும் வாய் வார்த்தைகளில் விஷயத்தை முடித்துவிட நான் தயாரில்லை...



டேய்.! எங்கள் இளவரசரையா அச்சுறுத்துகிறாய்- என்ன கொழுப்பு உனக்கு...
நானும் பாப்லாவும் உங்கள் இருவரின் குடலையும் உருவி வெளியில் போட இரண்டு நிமிடத்துக்கு மேல் ஆகாது தெரியுமா...?
நானும் ஜார்ஜும் இம்மாதிரி மிரட்டல்களை அவ்வளவாக இரசிப்பதில்லை என்கிற விஷயம் உனக்குத் தெரியுமோ...?
ணங்!
ஆ...வ்!
கும்!
உப்...ப்ப்!
இந்தா... உனக்கு!


பலே... பிரமாதம்! அறபுதம்' டி. வி. நிகழ்ச்சிகளில் செய்வது போலவே நேரிலும் அற்புதமாக சாகஸம் புரிகிறீர்கள்...! ப்ளீஸ்... என ஆட்டோகிராப புத்தகத்தில இருவரும் கையெழுததிட்டுக கொடுங்கள்!
தயவு செய்து அவருண... பபபடி செய்யுங்கள்.. அமெரிகக நாடான ... இளவரசர் பெயர் ... பர்காஸ் .. இன்றைககுததா... இங்கிலாந்து வநது சேர்நதிருக்கி...!


வரமாட்டேன்...! ... ஒரு முறையாவது நேரில சந்தித்து உரை... வேணடுமென்ற ... இன்று நிறைவேறிவி... து'
ஓ கே... ஆனால் மீணடும் வந்து எங்களை தொலலைப் படுததக்கூடாது-என்ன!


பின்னர்- ஜார்ஜும், டிரேக்கும் தங்களுடைய காரில் அங்கி ருந்து கிளம்பினர்...
பயல் அத்தனை போக்கிரி அல்ல... கொஞ்சம் நாசூக்கு தெரிந்திருக்கிறது!
பெரும் பணக்காரன்-கவனிப்பு போதாது. இதோ...-ரேடியோவில் தலைவர் ஏதோ பேச முனைகிறார்...கவனி!
கர்னல் ஹண்டரிடமிருந்து- வேட்டையர்களுக்கு-உடனே தலைமையகத்துக்கு வரவும்!


பயங்கர ஸ்டண்ட் காட்சியொன்றில் நடித்து முடித்து மிகவும் தளர்ந்து போயிருக்கிறோம். ஒரு நாள் முழுதாக ஓய்வு கிடைத்தால் அதற்குப்பின் எப்படிப்பட்ட ஆபத்தான பணியானாலும்-ப்ளீஸ்!
கலவரமடையத் தேவையில்லை, பசங்களா! நான் தரப்போகும் பணி... ஆபத்தானது அல்ல- சற்று வித்தியாசமானது.. அவ்வளவுதான்!



பின்னர் தலைமையகத்தில்-
என்ன ஸார் ஆச்சு உங்களுக்கு...? ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?
உங்களோடு பேசியபின் இங்கு வந்த ஒரு நபர் டி.வி. ஸ்டண்ட நிகழ்ச்சிகளில் அசகாய சூரர்கள் என்று பெயர் வாங்கிய இரு இளைஞர்கள் எப்படி முஷ்டிப் பிரயோகம் செய்வார்கள் என்று இங்கே நடித்துக் காட்டியதைப் பார்த்ததால் ஏறபட்ட அதிர்ச்சி... தயவுசெய்து யாராவது போய் எனக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வாருங்கள்!
அந்த நபர் உங்கள் இருவர் மீதும் அளவில்லாத அபிமானம் வைத்திருக்கும் பரம இரசிகர்... தென் அமெரிக்க நாடு ஒன்றிலிருந்து இன்றுதான் இங்கே வந்து சேர்ந்திருக்கும் அந்த இளைஞனை பாதுகாக்க வேண்டிய பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறேன்... மற்றவர்களால் அவனுக்கு தொல்லை ஏற்படுகிறதோ இல்லையோ தன்னைத்தானே தொல்லைகளுக்குட்படுத்திக் கொள்ளும் அடங்காப்பிள்ளை அவன்...
போதும்... புரிந்துகொண்டு விட்டோம்-யாரை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று!





விடிகாலை-மணி 6. அதுவரை அமைதியாகக் கிடந்த இலண்டன் மாநகர் வீதிகளில் திடீரென்று பேரிரைச்சலை எழுப்பிக் கொண்டு விரைகின்றன தீ அணைக்கும் வாகனங்கள்!





ஆமாம் ஸார்... நான்தான் போன் பண்ணினேன்! இருபதாவது மாடியில் இரண்டு நபர்கள் மாட்டிக் கொண்டுவிட்டார்கள்... அதோ அந்த ஜன்னல்தான்!
கவலைப்படாதே-நாங்கள் வந்து விட்டோமல்லவா...
ஹோட்டல் கட்டிடத்தின் இருபதாவது மாடியில்...
ஜன்னலுக்கு வெளியே ஏதோ இரைச்சல் கேட்கிறது!
ஆமாம்... அதைக் கேட்டுத் தான் நானும் விழித்துக் கொண்டுவிட்டேன்! எட்டிப் பார்-என்னவென்று...!
ஊப் ப்!
சர்ர்ர்...
ஹே... இ தெ.. ன்ன தொல்லே!


அட... இங்கே தீ எதுவும் கண்ணில் படவில்லையே! இது என்ன விபரீத விளையாட்டு ..?
எங்களுக்குத் தெரியும்
தென் அமெரிக்க நாட்டான் மாதிரிபேசுகிறஓர் இளைஞனை பார்த்தீர்களா?



அவர்களுடைய கணிப்பு தவறுகவில்லை...
என்னை மன்னியுங்கள் .. ப்ளீஸ்!
பொய் தகவல்கொடுத்து தீயணைப்பு படையினரை இங்கே வரவழைத்தது நீதானே... வேடிக்கை விளையாட்டுககு ஒரு வரம்பு வேண்டாமா -முட்டாளே... இந்த துஷ்டத்தனத்திற்கு நீ ஜெயிலுக்கு போகவேண்டி வரலாம்-தெரியுமா!
நான் தலைவருக்கு இதை தெரிவிக கிறேன்!


கர்னல் ஹண்டரோடு ரேடியோவில் தொடர்பு கொண்ட ஜார்ஜ் நடந்ததை விவரித்தான்...
...அவனுடைய தொல்லை தாங்கமுடியவில்லை இன்னொன்று தெரியுமா- நேற்றிரவு ரெஸ்டாரெண்டில்சாப்பிட்டு கொண்டிருக்கும்போது தமாஷ் பண்ணுகிற பேர்வழி என்று எங்கள் முகத்தில் நிறைய ஐஸ்கிரீமை அப்பிவிட்டுப் போய்விட்டான்!
ஹாஹ்..ஹா! ஸாரி ஜார்ஜ்-நான் சிரிக்கக் கூடாதுதான்... ஆனாலும் சிரிப்பை அடக்கமுடியவில்லை என்னால்!


...இதனால் நீங்களிருவரும் சலிப்புற்று கழற்றிக்கொண்டு விடலாகாது! நமது அரசு, ஜாராகான் அரசர் பர்கோ-ஸோடு முக்கியமான பேச்சு வார்த்தைகள் நடத்தவிருப்பதால், இரு நாடுகளிடையே நிலவும் நல்லுறவுக்கு இப்போது பங்கம் ஏதும் ஏற்பட்டுவிடலாகாது..., அவருடைய மகனின் கிறுக்குத்தனமான செய்கைகளை நாம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். அவன் பிரிட்டனைவிட்டு புறப்பட்டுச் செல்லும்வரை அவனை கண்காணித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களுடையது!
நன்றி...! இதை கேட்கத்தானா உங்களோடு இத்தனை அவசரமாக ரேடியோவில் தொடர்பு கொண்டேன்...! ஹும் !


நான வேறென்ன
செய்ய முடியும்?


தோழர்கள இருவரும் தஙகளால ஆன மடடும
தாககுப பிடிததுப பார்த்தார்கள...
ஹாய்...யா! ரோலர்-
ஸகேடடிங் எனறால
எனககு ரொம்ப இஷ
டம்.. எததனை குஷி
யாக இருக்கிறது
தெரியுமா?
அதறகாக எனனைப
பிடிதது என
தளளுகிறாய-



இபபடி திடீரென்று ஏற்படும் அசம்பாவிதங் களை எப்படி சமாளிக்கிறீர் கள்என்று சும்மா 'டெஸ்ட்' பண்ணிப் பார்த்தேன்... ஹாஹ்ஹா...!
ஆ...வ்!
மிருகக காட்சி சாலையில் ...
SNAKE HOUSE
எங்கே இதைப் பிடியுங்கள் பார்க்கலாம்!
ஹா ஆ ஆ...!


உங்களை முட்டாளாக்கி விட்டேன்...!-இரப்பர் பாம்பு...!
எனக்கு வருகிற கோபத்துக்கு உன்னை-
ஊஹூம் கோபப்பட்டு பிரயோஜனமில்லை டிரேக! போகட்டும் விடு! இன்று பிற்பகல் அருமையான பாப் மியூஸிக் புரோகிராம் ஒன்றிருக்கிறது - போகலாமா...!


பின்னர்...
அந்த பாண்டு வாத்தியக்காரர்களுக்கு ஒரு அவார்டு கொடுக்கலாம்... பயல் அப்படியே சொக்கிப் போய் 'கம்'மென்றிருக்கிறான்-கவனி!
the DOGS



நிகழ்ச்சி முடிவடைந்தபோது-
பெர்னண்டோ... வழி அந்தப்பக்கம் இல்லை - திரும்பிவா!
எங்கே ஓடுகிறான் இப்படி?


எல்லோரும் கவனமாக கேளுங்கள்... முக்கியமான செய்தி ஒன்று-டி.வி.யில் பிரமாதமாக ஸ்டண்ட் செய்யும் இரட்டைவேட்டையர்களை உங்களனைவருக்கும் நன்கு தெரியும். அவர்களுடைய நெருங்கிய நண்பன் நான் என்று பெருமையோடு சொல்லிக் கொள்வதோடு அவர்களிருவரும் இப்போது இதோ இங்கே உங்கள் மத்தியில்தான் இருக்கிறார்கள் என்பதையும் பணிவன்போடு தெரிவிக்கிறேன்!
ஆமாம்...! இதோ இருக்கிறார்கள் டிரேக்கும் ஜார்ஜும்
ஊய்...ய்ய்!



ஹலோ டிரேக்!
ஜார்ஜ்...!
ஓடாதீர்கள் . !
உங்களை சந்திக்க எப்படி துடிக்கிறேன தெரியுமா?
இவர்களிடம் அகப் பட்டுக் கொண்டோமோ ... தொலைந்தோம்! வா... ஓடிப் போய் விடலாம்!



அருகிலிருந்த பூங்காவினுள் நுழைந்து ஒளிந்து கொண்டார்கள்...
அவர்கள் இந்தப் பக்கமாகத்தானே ஓடி வந்தார்கள்...
பிரபலமாக இருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம் தான்-ஆனால் அதற்காக உயிரை விட்டுவிட முடியுமா!


தெளிவாக தெரிவித்துவிடு தலைவரிடம்!இனி ஒருகணம் கூட இந்த வாலுப் பயலை கட்டி மேய்க்க நம்மால் முடியாது!
இதோ...! தலைவர் என்ன சொன்னாலும் சரி-கேட்கப் போவதில்லை!
ஆனால் இதற்கிடையே-
அதோ இருக்கிறான் பயல்... அருமை யான வாய்ப்பு- சுலபமாக கடத்திக் கொண்டுபோய் விடலாம்!


தனியனாக சென்றுகொண்டிருந்த பெர்னாண்டோவைக் குறிவைத்து தாழப் பறந்து வந்தது அந்த ஹெலிகாப்டர்
R30


ஆவ்...!
உதவி..!
உதவி...!



இரசிகர்களிடமிருந்து தப்பியோடி வந்த ஜார்ஜும் டிரேக்கும் சற்றுத் தள்ளியிருந்த மரத்தின் மீதேறி ஒளிந்து கொண்டிருந்தனர்...
...ஆமாம், இனியும் இந்த சுட்டிப பயலை கட்டி மேய்க்க எங்களால் ஆகாது. எங்களை பாடாய்ப்படுத்தி விட்டான்... இனிமேலும் தாங்காது!
செய்தியை ரதது செய் டிரேக· அங்கே பார்'
மறு முனையில் இருந்தவர் S I. 6 உளவுப் பிரிவின் தலைவர் கர்னல் ஹண்டர்.
..நான இதுவரை சொன னதை அபபடியே மறந்து விடுங்கள் ! உடனே செல்லவேண்டும் நாங்கள் - அவசரம்
இவர்கள் இருவரும் ஆடும் கண்ணாமூச்சி ஆட்டம் ஒன்றும விளங்கவில்லை...' அந்தப் பையன் பொர்ணை-டோ எவ்வளவோ தேவலை என்பேன்'



இறங்கி ஓடி வா... யாரோ அவனைக் கடத்திச் செல்ல முயற்சிக்கிறார்கள்!
ஓடிச் சென்று அந்த கயிற்றை பிடிக்க முயற்சிசெய் ஜார்ஜ்- ஓட்டத்தில் நீதான் என்னைவிட கெட்டிக்காரன்!



இதோ...பிடித்து வி...ட்...அட...!



சோதாப்பயல்நீ-கோட்டை விட்டுவிட்டாயே ! கயிற்றை மேலே இழுத்து கொண்டுவிட்டார்கள் - இனிவாய்ப்பே கிடையாது!
ஊப் ப்!
பாவம்... பெர்ஞண்டோ!
நம் நிலைமையும்தான் பரிதாபத்துக்குரியதாகி விட்டது! நடந்ததை கேட்டால் கர்னல் நம்மை மெச்சிப் பாராட்டுவார் என்று நினைக்கிறாய்?
சில மணி நேர இடைவெளிக்குப் பின்-ஜாராகான் நாட்டு தூதரகத்தில் ..
எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டீர்களா... அந்த சம்பவம் நிகழ்வதற்குமுன் அவனுடைய நடவடிக்கைகளை நன்றாக நினைவுபடுத்திப் பார்த்து உன்னிப்பாக ஆராய்ந்தீர்களா? அவனுக்கு இங்கே எதிரிகள் யாரேனும் இருக்க வாய்ப்பு இருக்கிறதா?
இங்கே தூதரகத்தில் அவனுடைய சுட்டிக் குரங்கின் விஷமத்தனத்தினால் பாதிக்கப்படாதவர்கள் யாருமே இல்லை... அவர்களில் யாரேனும் இதைச் செய்திருக்கலாம்!



பொறுப்பில்லாமல் கோட்டைவிட்டு விட்டு வந்து இப்போது எனக்கு சமாதானம் சொல்கிறீர்களா? உங்களை நம்பி முக்கியமான பொறுப்பை ஒப்படைத்தது என்னுடைய முட்டாள்தனம்! இப்போது நேராக இங்கே வந்துகொண்டிருக்கும் ஜாராகான் அரசருக்கு என்ன பதில் சொல்லப் போகிறேனோ புரியவில்லை... தன் மகன்மீது உயிரையே வைத்திருக்கிறவர்! நடந்ததை கேட்டபின் உங்களை குதறிப் போடாமல் விட்டு வைப்பாரா என்பது சந்தேகமே. என் கண்ணெதிரே நிற்காதீர்கள் - தொலைந்து போங்கள் எங்கேயாவது!
ஆனாலும் அதிர்ஷ்டம் கொஞ்சம்கூட அவர்கள் பக்கம் இருக்கவில்லை...
அதோ அவர்கள்தான்! என் மகன கடததபபட்டதற்கு அவர்கள்தான் காரணம்! உயிரோடு பிடியுங்கள் இருவரையும்-நடந்த அசம்பாவிதத்துக்கு சித்திரவதைதான் அவர்களுக்கு சரியான தண்டனையாக இருக்க முடியும்!
தொலைந்தோம்...! ஜாராகான் அரசர் வந்துவிட்டார்!



பறந்தோடிப் போய் விட வேண்டும்... இங்கிருந்து!
அதோ தப்பியோடுகிருர் கள்... விரட்டுங்கள்... நிறுத்துங்கள்... பிடியுங்கள்!



இறுகப் பற்றிக்கொள் ஜார்ஜ்... கார் பயிற்சியின்போது சும்மா விளையாட்டாக கற்றுக்கொண்ட யுக்தி இது-பயனளிககிறதா பார்ப்போம் !
முட்டாள்களா...! வண்டியை அவர்கள் பின்னேக்கி செலுத்துகிருர்கள்-சுற்றி வளையுங்கள்!


இனி - நேராக போகப் போகிறோம்...!
வழியை மறி-நேராக அவர்கள் காரோடு போய் மோது... விடாதே!


ஊஹூம்... நடக்காது! நாங்கள் முந்திக் கொண்டு இப்படி பக்கவாட்டில் ஒரு உரசல் கொடுத்தால் வெற்றி எங்களுக்குத்தான்!
ஐயோ.. தொலைந்தோம்!


ணொங்!
ஆ வ்!
போச்சு...என்
அழகான கார்!


நாம் விரும்பியோ
விரும்பாமலோ
நிலைமை மோச
மாகிக் கொண்டே
போகிறது டிரேக்...!
நாம் தலையிட்டு சரிசெய்து விடலாம்
என்ற நம்பிக்கை எனக்கு இருக்கி
றது...ஆனால் இனியும் இந்த விஷயத்
தில தலைவர் நம்மை நம்ப மாட்டார்–
அத்தோடு ஜாராகான் மன்னர் வேறு
நம்மை எதிரிகளாக எண்ணுகிறார்...
RANGE ROVER


என் மகனை யாராவது உடனே தேடிக் கண்டுபிடித்து என்னிடம் கொண்டுவந்து ஒப்படைக்காவிடில். இத்தனைக்கும் காரணமான அந்த இரண்டு பசங்களையும வேட்டையாடி தீர்த்துக் கட்டுவதே என் வாழ்க்கையின் இலட்சியம் என்று உடன டியாகக் கிளம்பிவிடுவேன் ஆமாம்!


தங்களுடைய அறையில்...
...ம் நீயும் சீக்கிரம் மூட்டையைக் கட்டு. இங்கே பிரச்னை ஓயும் வரை எங்கேயா வது போய் தலைமறைவாக இருந்து விட்டு வருவோம்!
போன் மணியடிக்கிறது- யாரென்று நான் கேட்கிறேன்!
க்ரிங்...



பெர்னாண்டோ பர்காஸ் எங்கே இருக்கிறான் என்று தெரிந்துகொள்ள ஆசையாக இருக்கிறதா-கவனமாகக் கேள்...
கடைசி நேரத்தில் வந்து சேர்ந்த போன் கால் அவர்களுடைய திட்டத்தை திசை திருப்பிவிட்டது
சொல்... பெர்னாண்டோ இப்போது எங்கே இருக்கிறான்?
HAWKER
HARRIER
பைக்மூர் - ஸ்கொயர் க்ராக்... ஆனால் நீங்கள் இங்கே வருவதைப் பற்றி யாரிடமும் மூச்சுவிடக் கூடாது... பையன் எங்கள் வசம் இருக்கிறான்-எச்சரிக்கை!


மறுமுனையில் போன் வைக்கப்பட்டது...
பைக மூர்-நடமாட்டமில்லாத ஒதுக்குப்புற பிரதேசமாயிற்றே..! பெர்னாண்டோ மிரண்டு போயிருப்பான்!
தாமதித்தால் காரியம் கெட்டு விடும்... கிளம்பு-சீக்கிரம் அங்கே போய்ச் சேருவோம.



இதுதான பைக் மூர்- எதிரே தெரிவது ஸ்கொயர் ராக பகுதி!
யாரையும் காணோமே...! எந்த தடையமும் கண்ணில் படவில்லை!





F-2



பெர்னாண்டோவை கடத்திக் கொண்டு போய் வைத்திருப்பவர்கள் நம்மை இங்கே வரச் சொன்னது ஏன் என்று விளங்கவில்லை. ஒருவேளை நம் கவனத்தை திசை திருப்பிவிடும் தந்திரமாக இது இருக்குமோ?
ஹே... அதோ-அங்கே பார்... கயிறு தொங்கிக் கொண்டிருக்கிறது!


நாம் மேலே ஏறி வரவேண்டும் என்பது அவர்களுடைய எண்ணமாக இருக்ககூடும்.



அப்போது ..
அற்புதமான சாகஸச் செயல்... அருமையான படப்பிடிப்பு!



அவர்களிருவரும் மேலேறி கயிற்றின் மறுமுனையைச சென்றடைந்ததும்...
இங்கே எதுவுமே இல்லை... ஆட்கள் யாரும் இருப்பதாகவும் தோன்ற விலலை-விளையாடுகிறார்களா... என்ன?
அவசரப்படாதே டிரேக்...



இரண்டு பாராசூட்டுகளும், ஹெல்மெட்டுகளும-கூடவே குறிப்பு ஒன்று ..!
வா.. அப்படியே செய்து தொலைப்போம்!
இவற்றை பயன்படுத்தி குன்றின் மறுபக்கம தரையிறங்கினால் எங்க ளுடைய மறைவிடத் துக்கு நீங்கள் வந்து சேரும வாய்ப்பு கிட்டும்



ஓ.கே-நீ... ரெடியா?
ரெடி!... குதிப்போமா !


நல்லவேளை... ஏமாற்று வேலை
ஏதுமில்லை-பாரசூட் விரிந்து
கொண்டுவிட்டது!



இதற்கிடையே.
தத்ரூபமான
காட்சி-பிரமாதம்!


ஏறத்தாழ நாம் தரையை தொட்டு விட இருக்கிறோம்-இங்கேயும் ஆள் நடமாட்டமில்லாத வெட்டவெளி தான் கண்ணில்படுகிறது...
...கீழே நமக்காக அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சங்கேதக் குறியை என்னால் பார்க்க முடிகிறது!


சிறு கற்களால் உருவாக்கப்பட்டிருக்கும் அம்புக்குறி அந்தப பககமாக சுட்டிக் காட்டுகிறது...
அபபடியானால் நாம் அடுத்து பயணம் செய்ய வேண்டியது அந்தத் திசையில்தான்!


அவர்கள் கொஞ்ச தூரம் கால்நடையாகச் சென்ற பின்னர்
ஆவ்... புதை மணல்!
வெ-வெளியேற முடியாது போலிருக்கிறதே!
தொபக்!



அதோ... உறுதியான தரை! என் தோளின் மீதேறி பாய்ந்து கரையேற முயற்சி செய் ஜார்ஜ்!
நன்றி டிரேக்.! இப்படிச் செய்ய வேண்டியிருக்கிறதே என்று எனக்கு வருத்தம்தான்!



கவலைப்படாதே... நொடியில் உன்னையும் மீட்டு கரை யேற்றிவிடுவேன் தோழனே!
ஹூம்ம்...ம்ம்!


மயிர்க்கூச்செறிய வைக்கும் இன்னுமொரு அற்புதமான காட்சியையும் படமாக்கிக் கொண்டாயிற்று!




சில நிமிட இடைவெளிக்குப பின்
வெறிச்சோடிக் கிடக்கும பண்ணை வீடு ஒன்று- அதோ... அங்கே!
ஒரு-வேளை அதனுள்ளே பெர்ணண்டோவை அடைத்து வைத்திருப் பார்களோ?
ஜன்னல்கள், கதவுகள் எல்லாமே சட்டமிட்டு ஆணியடிக்கப்பட்டி ருக்கின்றன-உள்ளே செல்ல வழியேதும் இருப்பதாகத் தெரியவில்லை!


மேலே இருககும் புகை போக்கிக் கூண்டு வழியாக உளளே இறங்க முயற்சிதது பாரககலாம்!
நல்ல யோசனை!



திடீரென்று!..
தொலைந்தோம்! பெர்னாண்டோவை கடத்திச் செல்ல பயன்படுத்தப்பட்ட அதே ஹெலிகாப்டர்!
R30
நேராக நம்மைத்தான் குறிவைத்து வருகிறது-நம்மீது மோதி கூரையிலிருந்து கீழே தள்ளிவிடுவது அவர்களுடைய நோக்கமாக இருக்கலாம்!



R-30


படுத்துக
கொண்டுவிடு!
ணாங்!
கூரையோடு
ஒட்டிக் கொள்!


புகைக் கூளடை தகர்ததுக கீழே தள்ளிவிட்டுப போய் விட்டதுஅந்த ஹெலிகாபடர் -நமக்கு வேலே சுலபமாகி விட்டது!
சீககிரம நாம கீழே போய்விட வேண்டும்-அந்த ஹெலிகாப-டர் எந்த விஞடியும் நம்மைக குறி வைதது திரும்பி வரக்கூடும்


நடிபபல்ல...! படமாகியிருககும் அத்தனே காட்சிகளும் இயற்கை யான சாகஸ செயலகள்! இரணடு பேரும் டி.வி. நிகழ்ச்சியில் வருவது போல் நிஜமாகவே அற்புத செயல திறன் கொண்ட வீரர்கள்தான்!


இங்கே பெர்னாண்டோவை அடைத்து வைத்திருப் பார்கள் என்று தோன்றுகிறது...
இருவரும் ஒன்றாக சேர்ந்து மிகுந்த எச்சரிக்கையோடு, கீழ்நோக்கிச் செல்லும் அந்த படிக்கட்டில் இறங்கிப் போக லாம் வா...!


சில நிமிடங்களுக்குப் பின்-
இங்கேயும் யாரையும் காணோம்-வித்தி யாசமாக எதுவும் கண்ணில் படவில்லை ...தகவல் கொடுத்து நம்மை இங்கே வரவழைத்த ஆசாமியின் நோக்கம் தான் விளங்கவில்லை...
நேரடியாக வந்து நம்மைச் சந்திக்காமல் இன்னமும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருக் கிறானே!



ஹே... காலடியில் தரைக்கும் கீழே தொம் தொம் என்று தட்டும் ஓசை கேட்கிறதே!
அதோ தரையில் ஒரு திட்டி வாயில் இருக்கிறது பார்!
கதவு தாழிடப்பட்டிருக்கவில்லை... சுலபமாக திறக்க வந்தது இருவரும் அதன் வழியாக கீழே இறங்கினர்...
குகை மாதிரி போகிறது...
நாம் இப்போது முதல் ஒன்றுமே பேசாமல் மௌனம் காப்பது நல்லதொரு பாதுகாப்பு நடவடிக்கையாக இருக்கும்!


ஒரே கும்மிருடடு... எதை யுமே பார்கக முடியவில்லை...
பொர்ஞணடோவை இங்கே அவர் கள அடைததது வைததிருந்தார்கள் என்ருல் பயல பாவம் பயத்திலேயே உயிரை விடடிருபபான்!


ஆ . வ!
டார்ச் லைட்...! கணகளை மூடிக கொணடுவிட நிர்பந்திக்கும் பிரகாசமான ஒளி!



யாரோ வருகிறார்கள்... முந்திக் கொள்ள வேண்டும் நாம்...!
உப்...ப்ப்!
இதோ... ஒரு ஆசாமியை வகையாக பிடித்துக் கொண்டுவிட்டேன் நான்.. !


அடேய் சோமாறி நாய்களா- பெர்னாண்டோவைஎங்கே...? அந்தப் பையனை என்ன செய்து தொலைத்தீர்கள்?- உடனே பதில் வராவிட்டால் இடுப்பெலும்பு முறிந்து போகும்...!
டிரேக்... இவர்கள் யாரோ அல்ல... பெர்னாண்டோ வின் மெய்பாது காவலர்கள்!


அற்புதம்... பிரமாதம்! வீர தீர சாகஸச் செயல்களின்தொடரில் இந்தக் காட்சி அருமையான தொரு முத்தாய்ப்பு! ஆகா...!
பெர்னாண்டோ...!
நீ...நீயா?


அப்படியானால் நீ இங்கே கைதியாக அடைபட்டுக் கிடக்கவில்லையா...?
ஆமாம்...! சட்டென்று நிலவரத்தைப் புரிந்துகொண்டுவிட்டீர்களே! உங்களை இங்கே வரவழைக்கும் நோக்கத்தோடு உங்களுக்கு போன் செய்த நபரே நான்தான்!
ஏன் . ? எதற்காக அப்படிச் செய்தாய்?


டி.வி.யில் நீங்கள் வரும் 'வேட்டையர்' நிகழ்ச்சி என்னை பைத்தியமாக ஆக்கிவிட்டது .. அப்படியொரு உண்மை நிகழ்ச்சியில் நானும் பங்கேற்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தேன்... இன்று நிஜமாகவே நடந்தேறிவிட்டது என்னுடைய ஆசை!
S.I. 6 லிருந்து நாங்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பது.. வழியில் எங்களுடைய உயிருக்கே ஆபத்து நேரவிருந்தது-இத்தனை களேபரங்களும் உனக்கு ஒரு வேடிக்கை .. பொழுதுபோக்கு... அப்படித்தானே?


சைத்தானே...! இப்போது நான் அடிக்கிற அடியை வாங்கிக்கொண்டபின் இப்படியொரு போக்கிரித்தனம் செய்யும் எண்ணம் உனக்கு ஆயுளுக்கும் வரக்கூடாது...!
பொறு. . ஆத்திரப்படாதே டிரேக்! இவனுடைய அப்பா-ஜாராகான் அரசர்-இப்போது பிரிட்டனில்தானிருக்கிறார் என்பதை மறந்து விடாதே...! இவனை கண்டிக்கும் அல்லது தண்டிக்கும் பொறுப்பை அவரிடமே விட்டு விடுவதுதான் நமக்கு நல்லது...!


சில மணி நேர இடைவெளிக்குப் பின-
உன்னுடைய துஷ்டத்தனம் வரவர எல்லைமீறிப் போய்க் கொண்டிருக்கிறது பெர்னாண்டோ... வந்த இடத்தில் இப்படித்தானா போக்கிரித்தனம் பண்ணுவது-நீ இப்போதே என்னோடு ஜாராகானுக்கு கிளம்புகிறாய்.
ஸாரி... இளைஞர்களே! உண்மை தெரியாமல் வீணாக உங்கள்மீது கோபப்பட்டுவிட்டேன்! தற்காலிக வேலைநீக்கம் செய்தது தவறான நடவடிக்கை என்றாகி விட்டது... மீண்டும் நீங்கள் S.I. 6ல் பொறுப்பேற்கிறீர்கள்!
ஐயோ...!
நன்றி... தலைவர் அவர்களே! ஆனால் ஒரே ஒரு நிபந்தனை - நீங்கள் இனி எங்களுக்கு மிக மிக ஆபத்தான பணி எதுவானாலும் கொடுங்கள்...
...ஆனால்-இம்மாதிரி ஏதாவது ஒரு நாட்டு அரசருடைய மகனை-அவன் எங்களுடைய பரம விசிறியாக இருந்தாலும் சரி... இல்லாவிட்டாலும் சரி-கவனித்துக் கொள்ளும் பொறுப்பை மட்டும் இனி ஒரு போதும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதை இப்போதே மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறோம்!
முற்றும்.
54



மாடஸ்டியின்
கதை
இரண்டாம் உலக யுத்தம் முடிவுறும் தறுவாயில், கிரீஸிலுள்ள ஒரு அகதிகள் முகாமிலிருந்து மெல்ல நழுவி வெளியேறினாள் ஒரு சிறுமி.
முடிவின்றி நீண்ட துயரங்களினூடே அவளை அரவணைத்து வந்த கரம் துவண்டு விழுந்து விட்டது... அவள் அனாதையாகிப் போனாள்...
எத்தனையோ பயங்கரங்களை நேருக்கு நேர் பார்த்த அதிர்ச்சியில் அவளுக்கு எல்லாமே மறந்துபோய் விட்டது. தன் பெயர்கூட அவளுக்கு நினைவில்லை. அங்கிருந்து தப்பியோடி விட வேண்டும்- இதுதான் அப்போதைக்கு அவளுடைய இலட்சியம்...
கால் போன திசையில் நடந்தாள். இரவுப் பொழுதை கானகத்தினூடே கழிக்க நேரிட்டபோதும் அவள் கலக்கமடையவில்லை.
55


குளிர்காலம் வந்தடைந்தபோது அவள் ஒரு கிராமத்தில் தங்கினுள்- பசியைப் போக்கிட கடுமையாக உழைததாள்-முடியாத'போது பிச்சை எடுத்தாள்...
அச்சமும், துயரமும் அவளை விட்டு விலகிக்கொண்டு விட்டன-உயிரை தக்கவைத்துக் கொள்ளும் கலையில் தேர்ந்து விட்டாள்—
மீண்டும் நெடுந்தூர பயணத்தை மேற்கொண்ட அந்தச் சிறுமி, மற்ற சில அகதிகளோடு எல்லையை கடந்து பெர்ஸியா நாட்டுக்குள் புகுந்தாள்.
அவளைப்போல் நாடிழந்து, வெறுங்கையோடு, மனம் தளர்ந்து அங்கே வந்து சேர்ந்தவர்களுக்காக அமைக்கப் பட்ட முகாம்கள் பல இருந்தன...
ஆனல் அவள் எந்த முகாமிலும் நீடித்துத் தங்கவில்லை. பயணம் தொடர்ந்தது-நகர கடை வீதிகளில் திருடினுள்-நாடோடி கும்பல்களோடு தங்கினுள்-
அப்படி அவள் ஒரு அகதிகள் முகாமில் தங்க நேரிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் தான் அந்தக் கிழவரை சந்தித்தாள். அவரிடமிருந்த அற்ப உணவுப் பொருளை திருடன் அபகரிக்க முயன்ருன்.
56


அது தனக்கே
நேரிட்ட பிரச்சி-
னையாக
எண்ணி சிலிர்த்
தெழுந்த சிறுமி,
திருடன் மீது
ஆக்ரோஷமாகப்
பாய்ந்தாள்-
அவளிடமிருந்த ஒரே
பாதுகாப்பு ஆயுதமான
சிறு கத்தி திருடனின்
முழங்கையில் கீறியதை
அடுத்து அவன் தப்பி-
யோடி விட்டான்...
தனித்து உயிர் வாழ முடியாத
அளவு பலவீனப்பட்டுப் போ-
யிருந்தார் அந்தக் கிழவர்
அவரை தன்னால் பராமரிக்க
முடியும் என்று நம்பினாள் அந்த
பன்னிரண்டு வயது சிறுமி
விசித்திரமானதொரு நட்பு அவர்
களிடையே மலர்ந்தது, ஏதோ
புரபஸர் என்று தன்னை சொல்லிக்
கொண்ட அவருக்கு எல்லாமே
தெரிந்திருந்தது
முகாமை விட்டு
வெளியேறினர்-
அவளுக்கு கோ-
டைகாலம் முழு-
வதும் பாடம்
சொல்லிக் கொடுத்
தார்-மாடஸ்டி
என்று அவளுக்கு
பெயர் சூட்டி
மகிழ்ந்தார்.
அடுத்த நான்கு ஆண்டு
களுக்கு அவர்களிரு-
வரும் நாடோடிகள்
போல் இடம் விட்டு
இடம் சென்று கொண்டேயிருந்தனர்-
வழியில் ஆபத்து ஏற்பட்ட போதெல்-
லாம் மிக அலட்சியமாக சமாளித்
தாள் மாடஸ்டி


புத்தகங்களை திருடிக் கொண்டு வந்து கொடுத்தாள்-நிறைய அவர் கற்றுக் கொடுப்பார் என்று. கற்றுக்கொடுப்பதை அவள் புரிந்து கொள்ளும் வேகம் அவரை வியக்க வைத்தது...
ஒரு கதையில் வந்த பிளேஸி என்ற பெயர் அவளுக்கு ரொம்பவும் பிடித்துப்போனதால் அதை மாடஸ்டி என்ற பெயரோடு சேர்த்துக் கொண்டுவிட்டாள்.
Modesty Blaise
மற்றவர்களைப் போல் தானும் வசதிகளோடு வாழவேண்டும் என்ற இலட்சிய வெறி அவளை நகரத்தின்பால் இழுத்தது—
நகரை அடையும் தறுவாயில் கிழவர் செத்துப்போனார்-அவரை அடக்கம் செய்து முடித்த மாடஸ்டி, வாழ்க்கையிலேயே முதல் முறையாக கதறி அழுதாள்.
ஹென்ரி என்பவன் நடத்தி வந்த சூதாட்ட அரங்கில் பணிப் பெண்ணாக இருந்தாள். அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவள் கற்றுக் கொண்டது ஏராளம்...
இரண்டு கும்பல்களிடையே நடந்த மோதலில் ஹென்ரி கொல்லப்பட்டுவிட்டபோது அவன் இடத்தை மாடஸ்டி இட்டு நிரப்பினாள்.


திட்டங்களை வகுத்தாள் .. அவற்றை செயல் படுத்தின கும்பல் வலுப்பெற்றது. நாடுகள் தோறும் கிளைகள் தோன்றின!
இருபதே வயதில் அவள் பெயர் உலகின் மூலை முடுக்கு எங்கிலும் எதிரொலித்தது . ஆனால் குற்றங்களை நிரூபிக்கவே முடிய வில்லை –
மாடஸ்டியிடம் கெட்ட பழக்கங்கள் ஏற்படவேயில்லை. மனிதனை ஈனப்படுத்தும் தீய பழக்கங்களை அறவே வெறுத்தாள்...
வில்லி கார்வினை முதல் முறையாக சைகோனில் நடந்த ஒரு குத்துச்சண்டை மைதானத்தில் அவள் சந்தித்தாள்!
சட்டத்திற்கு புரம்பான அந்தப் போட்டியில் பங்கேற்றதால் கைது செய்யப் பட்டார்-கார்வின்.
அவரை சிறையிலிருந்து மீட்டாள் மாடஸ்டி-எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல்! திகைத்துப் போன கார்வினுக்கு அவள் ஓர் இளவரசியாகவே தோன்றினாள்
மாடஸ்டியின் சகவாசத்தால் முரட்டு கார்வின் முற்றிலும் மாறிப்போனார். நம்பிக்கையும், மகிழ்ச்சியும் கடின சித்தத்தில் துளிர் விட்டன...
59



விரைவிலேயே மாடஸ்டியின் வலது கரமாகி விட்டார்அவர்.
சேர்ந்து திட்டமிட்டனர்-சேர்ந்து சண்டை போட்டனர்-தப்பியோடினர்-ஒருவர் காயம் பட்டபோது மற்றவர் கவனித்துக் கொண்டனர்-ஆறு ஆண்டு காலத்தில் நிறைய செல்வம் குவித்து விட்டனர்-
தன் கும்பலை பல துண்டுகளாக்கி குழுத் தலைவர்கள் வசம் ஒப்படைத்து விட்டு அந்த வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டாள் மாடஸ்டி.
இலண்டனில் ஒரு வீட்டை வாங்கி குடியேறினாள். ஆயுளுக்கும் போதுமான பணம் சேர்த்துக் கொண்டு விட்ட கார்வின் தேம்ஸ் நதியோரமாக இருந்த ஒரு விடுதியை வாங்கினார்.
மாறுபட்ட அந்தப் புது வாழ்க்கை அவர்களுக்கு அலுப்பூட்டியது. இந்தப் பலவீனத்தை எப்படியோ மோப்பம் பிடித்து விட்டார்-ஸர் ஜெரால்டு டர்ராண்ட்-பிரிட்டிஷ் உளவுத்துறை மேலதிகாரி!
கார்வின்-மாடஸ்டி வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயம் தொடங்கியது. நீதிக்காக முதன்முறையாகப் போராடத் துவங்கினர்-


ஆனாலும் அவர்கள் உளவுத் துறை ஊழியர்கள் அல்ல , உழைப்புக்கு ஊதியம் பெற மறுத்தனர்- உத்தரவுகள் தங்களைக் கட்டுப்படுத்தவும் அனுமதிக்கவில்லை!
ஆபத்து அவர்களை தேடிக் கொண்டு வரத்தொடங்கியபோது, புது உற்சாகத்தோடு வரவேற்றனர்!
பழி வாங்கும் புயல்!
வின்னி பெக்கிற்குத் தெற்கே, அமெரிக்க எல்லையருகே இருந்த வீனஸ் மருத்துவ மனையில்...
உள்ளே வாருங்கள் டாக்டர் ரீவ் ..
சற்று முன்னர் ஒரு போன்கால் வந்தது-கேப்ரியலிடமிருந்து!
கேப்ரியலா? அவர்-இங்கே வரப்போகி-றாரா என்ன?



ஏன் திடுக்கிடுகிறீர்கள்? வாடிக்கையான சோதனை தானே?
வாடிக்கையாளர்களிடமிருந்து நாம் கறக்கும் இரகசியங்களைக் கொண்டு கொள்ளை கொள்ளையாக சம்பாதிக்கிறான்!
உண்மைதான் - வாடிக்கையாளர்கள் வேறு பெருந்தொகையை கட்டணமாக செலுத்திவிட்டுப் போகிறார்கள்! பின்னே என்ன பயம்?
கேப்ரியலைப் பற்றித்தான்!
அவனை நான் ஒரே ஒரு தடவை தான் பார்த்திருக்கிறேன் - கொழுத்த ஊதியமாக எனக்கு அளித்து வருகிறான். அவனைப் பற்றி நான் அறிந்தது இவ்வளவே!
எனவே?
எத்தனையோ மோசடித் திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்திவருகிறான். அவன் - அவற்றில் இந்த மருத்துவமனையும் ஒன்று!
இங்கே ரொம்ப அலட்டிக்கொள்ள மாட்டான்!
உண்மை தான்!



இப்போது கேப்ரியல் எங்கிருக் கிருன்?
இங்கிருந்து அரை மணி நேர கார் பயணத் தொலைவில் ஏரிக்கரை பங்களா வில்! தன்னுடைய நிர்வாக அதிகாரி களையும் உட - னழைத்து வந்திருக்கிறன்!
நாளை இங்கே வரப்போ கிறன் . ஒவ்வொரு பிரி- வையும் பார்வையிடக் கூடும்!
குறிப்பாக சொர்க்கம் 'பி' வைத்திய முறையை நாம் எப்படி நடத்து கிறேம் என்று நேரில் கண்டறிய விரும்பு கிருன்.
இங்கே வருகிற வாடிக் கையாளர்களில் ஆறு பேருக்கு ஒருவர்தான் உருப்படியான தகவலை வெளியிடுகிரார் - அப் படிப்பட்ட ஒரு நபரை தேர்ந்தெடுத்து தயார் செய்து வைக்கிறேன்!
கேப்ரியல் பார்வையிட வருவதை நம் ஊழியர் களுக்கு தெரிவித்து விடலாமென்று நினைக்கிறேன்!
செய்யுங் கள்!
ஆனல்...எல்லோ ரிடமும் சொல்லித் தொலைத்து விடா தீர்கள்?
தெரியாதா எனக்கு?
என் பழைய நண்பர் டாக்டர்ரஸ்கின் என்னைப் பார்த்துவிட்டுப் போய் வருவதாகச் சொல்லுங்கள்!


மறுநாள் - கேப்ரியல் வீனஸ் மருத்துவ-மனைக்கு வந்து சேர்ந்தான்!
ஸார் - உங்கள் நண்பர் வந்து விட்டார்!
டாக்டர் ரஸ்கின்! உள்ளே வாருங்கள்.
அமருங்கள்!
முதலில் எல்லா இடத்தையும் எனக்கு சுற்றிக் காட்டு-பைல்களை காட்டு பிறகு மொத்தத்தில் நடப்பு என்ன என்று வாய்வார்த்தையாகச் சொல்-ம்-கிளம்பு!
வாடிக்கையாளர்கள் நிறையத்தான்!
ஏகப்பட்ட பேர் இருக்கிறார்கள்! ஆனால் நிஜவியாதியஸ்தர்களை இங்கே அனுமதிப்பதில்லை-பணக்கார போதை வெறியர்கள்-விரக்தியடைந்த பணமுதலைகள் - இவர்களை மட்டுமே எடுத்துக் கொள்கிறோம்.
நம் ஊழியர்கள் மிக திறமையானவர்கள்-நம்புகழ் வேகமாகப் பரவி வருகிறது!
எல்லைக்கு அப்பாலிருந்து கூட வாடிக்கையாளர்கள் வரத் தொடங்கி விட்டனர் - அமெரிக்க அரசு அதிகாரிகள் இருவர் உள்பட!


ஓ-டாக்டர்! சொர்க்கம்-9 சிகிச்சை பெற்ற பின் மறுபிறவி எடுத்த உணர்வு ஏற்பட்டிருக்கிறது!
மிகவும் நம்பகமான சிகிச்சை முறை அது-மிஸஸ் ராபர்ட்!
'சொர்க்கம்-9' முதல் கட்ட சிகிச்சையின் போது அவள் வெளியிட்ட அந்தரங்க உண்மைகளை வைத்து மிரட்டி நீங்கள் அவளுடைய ஆயுட்காலம் முழுவதும் கறந்து கொண்டேயிருக்கலாம்!
வொர்லி! இரகசியங்களை என்னிடம் ஒப்படைப்பதோடு உன் பணி முடிகிறது! அதன்பின் அதை எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறேன் என்ற கற்பனை உனக்கு வேண்டாம்-
'சொர்க்கம்-9' சிகிச்சை பிரிவுக்கு இப்போது செல்வோமா...!
அங்கே ஒரு நபருக்கு சிகிச்சை தொடங்கயிருக்கிறது!
யாரது?
பிளாஸ்டிக் கம்பெனி ஒன்றின் உயர்நிலை விஞ்ஞானி! கட்டுப்பாட்டு அறையிலிருந்தவாறு உள்ளே நடப்பதை நாம் கவனிக்கலாம்!
இதோ இருக்கிறானே ஜான்-இந்த வேலையில் கில்லாடி!
இதோ இருக்கும் ஜானுக்கு சம்பளம் கொடுக்கப்படுவது அதற்குத்தான்!


மெலிதாக வெளிச்சம் பரவியிருந்த அந்த அறை நிசப்தமாக இருந்தது...
தூக்க மாத்திரைகளை விட உங்களுடைய சிகிச்சை சிறந்தது என்று கேள்விப் பட்டேன்!
மன இறுக்கத்தை தளர்த்தும் இயற்கை வழிகளை விஞ்ஞான முறையில் ஒருங்கிணைத்து இந்த சிகிச்சை முறையை வகுத்திருக்கிறோம் - மேலே கூரையில் கண்ணுக்கு விருந் தாக மீன் தொட்டி அமைப்பு...
மெல்லிய இன்னிசை- உடலுக்கு இதமாக வெந்நீர் படுக்கை- இப்படியாக!
விதானத்து மீன் தொட்டியிலிருந்த மீன்களை வேடிக்கை பார்த்தவாறு படுத் திருந்தார் அந்த நபர்
ஆசாமி, விஞ்ஞானி என்றால் உபயோக மான தகவல் வெளி வரலாம்!
நான் இப்படியே தூங்கி விட்டால் சிகிச்சை கெட்டுப் போய் விடுமில்லையா?
ஆமாம் - ஆனால் தூங்க மாட்டீர்கள். இரண்டு மணி நேரம் கழித்து திரும்பி வருவேன் - பத்து நிமிட இடைவெளியாக உங்களுக்குத் தெரியும்- இடையில் தொடர்ந்து விழித்துக் கொண் டிருப்பீர்கள்-
இந்தக் கட்டத்தில் நாம் 'டேப்' பை இயக்குகிறோம்.



சிகிச்சை முற்றுப் பெறும் வரை உட்கார்ந்திருந்தான் கேப்ரியல்.
முடிந்து விட்டது!
அடுத்து என்ன-வென்று விளக்கு ஜான்!
டேப்பை போட்டுப் பார்த்து அவன் தெரிவித்த செய்திகளின் அடிப்படையில் ஒருவார இடைவெளிக்குப் பின் இரண்டாம் கட்ட சிகிச்சை திட்டமிடப்படும்-
கிடைக்கும் தகவல்களை நான்கு வகையாக பிரித்து வைக்கிறோம்- ஒன்று தொழில் இரகசியங்கள்- இரண்டு-பண விவகாரம்-மூன்று உளவு இரகசியங்கள்- நான்கு அசிங்கமான உண்மைகள்!
உங்கள் கருத்து?
நன்றாகத்தான் செய்கிறீர்கள்-இனி பைல்களை காட்டு!
பூர்த்தியடையும் ஃபைல்களை உங்கள் நியூயார்க் நபருக்கு அனுப்பி விடுகிறோம்! அதை வைத்து அவர் செயல்படும் விதமிருக்கிறதே...
வொர்லி... அடுத்தவன் என்ன செய்கிறான் என்ற கற்பனைகள் உனக்கு நல்லதல்ல!
இருந்தாலும், அமெரிக்க பூச்சி மருந்துக் கழகம்'' பல லட்சங்களை செலவழித்து புது ஃபார்முலா ஒன்றைக் கண்டுபிடித்தும்...
A.F.


...ஜெர்மனியிலிருக்கும் ஒரு கம்பெனி அதே மருந்தை ஒரு மாதம் முன்னதாகவே, மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு வெளியிட்டது எப்படியாம்?
பெருந்தொகை கொடுத்து அவர்கள் வாங்கிய ஃபார்முலா எங்களால் இங்கே வரவழைக்கப்பட்ட இரகசியம் அல்லவா?
வரம்பு மீறி மூக்கை நுழைக்கிறாய்.. எச்சரிக்கையை அலட்சியம் செய்தாயோ போகப்போவது உன் வேலை மட்டுமல்ல...
விளங்குகிறதல்லவா...?
கிளம்பிவிட்டான் கேப்ரியல்.
என்ன ஆயிற்று!
விபரீதமாக ஒன்றுமில்லை தான்!
ஆனாலும் அவன் ஆலோசனை நடத்த வேறெங்காவது சென்றிருக்கக் கூடாதா? மிக அண்மையிலிருக்கும் ஏரிக்கரை பங்களாதானா அகப்பட்டது?
68


அதே சமயம்-
நீண்ட இடைவெளிக்குப் பின் சந்திக்கிறோம்- இல்லையா ஸர் ஜெரால்டு...!
ஆமாம்- விசையை அழுத்து!
மாடஸ்டி விசையை அழுத்தியதும் சற்று தொலைவில் போலி புரு ஒன்று விண்ணில் பாய்ந்தது ..
ம்ம்... சரிப்பட வில்லை! ஆனால் இந்த தொலை விசை இயக்கு முறை ஒரு நல்ல ஏற்பாடு!
இது வில்லி கார்வின் வடிவமைத்தது-தனியா கவே இந்தப் பொழுது போக்கில் எடுபடலாம்!
துப்பாக்கியை இப்படிக் கொடுங்கள்!
உன் திறமையைப் பார்த்துக் கொண்டி ருப்பது இனிய அனுபவம்தான்...
ஸர் ஜெரால்டு விசையை இயக்க- வெளிப்பட்ட போலிப்புருவை குறி வைத்தாள் மாடஸ்டி...!
டுமீல்!
அருமை!


கார்வின் இங்கே வருவதில்லையா?
வராமலென்ன... ஆனால் தற்காலிகமாக ஒண்டோரியோவில் தங்கியிருக்கிறார்.
ஒண்டோரியோவிலா...? அப்படியானால் அங்குள்ள 'வீனஸ் மனநிலையத்தைப்' பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கக்கூடுமே!
உத்தியோகத்தின் பிடியிலிருந்து விடுபட்டு ஓய்வாக இருக்கும்போது எத்தனை சுகமாக இருக்கிறது தெரியுமா...?
கனடாவிலுள்ள ஒரு மன நிலையத்தைப் பற்றி ஏதோ சொல்ல வந்தீர்களே?
ஊஹூம் பொழுது போக்காக வந்த இடத்திலும் உத்தியோக முறை பேச்சு தானா?-வேண்டாம் விடு!
பரவாயில்லை-சொல்லுங்கள்!



உளவாளி ஒருவருக்கும் மட்டுமே தெரிந்த ஒரு இரகசியத்தை சிலர் விற்க முயன்ற விபரம் சமீபத்தில் தெரிய வந்தது.
நம்பகமானவர். அவராக அதை வெளியிட்டிருக்கவே மாட்டார்! விடுமுறையில் கனடா சென்ற அவர் ஓய்வுக்காக வீனஸ் மனநிலையத்தில் சில தினங்கள் தங்கியிருந்திருக்கிறார்!
சம்பந்தமிருக்கிறது . ! அந்த மனநிலையத்தின் செய்கைகளை இரகசியமாக ஆராய்ந்துவிட்டேன் சந்தேகப்படும்படியாக ஏதும் வெளிவரவில்லையென்றாலும் அங்கு என்னவோ நடப்பதாக எனக்குள் உறுத்திக் கொண்டேயிருக்கிறது!
ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் உள்ளதே!
இலண்டனில்-ஸர்ஜெரால்டு வந்து போன பத்து தினங்களுக்குப் பின்-
வீனஸ் மன நிலையத்தைப் பற்றி விபரம் தெரியுமா என்று கார்வினுக்கு நான் எழுதிய கடிதத்துக்குப் பதில் வந்திருக்கிறது...
மேற்கொண்டு ஆராய வேண்டிய விவகாரம்தான் இது!
கார்வின் என்ன எழுதியிருக்கிறார்?
நிறைய-குறிப்பாக...அந்த மனநிலையத்தோடு கேப்ரியல் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறதாம்.
கேப்ரியலா? நீ உடனே இங்கே புறப்பட்டு வர முடியுமா... மாடஸ்டி?


லானியர் என்ற செல்வந்தரின் பெண்ணேடு விடுமுறையிலிருக்கிருர்...
அந்த நிலேயத்தில் சிகிச்சை பெற்றதாக குறிப்பிடப் பட்டுள்ளது...
மேலே படியுங்கள்!
அவர் அங்கே சென்று வந்த பின்-முன்னதாக அவர் பேரம் பேசி வைத்திருந்த பாக்டரி ஒன்றை எதிர்பார்த்த விலேயை விட இரு மடங்கு கொடுத்து வாங்க நேரிட்டதாம்!
ஆமாம்... யாரோ அவருடைய திட்டத்தைத் தெரிந்து கொண்டு லாபம் பார்த்து விட்டார்கள்!
உங்கள் உளவாளியும், லானியரும் அவர்களே அறியாமலேயே இரகசியத் தகவல்களே வெளியிட்டிருக்கிருர்கள்- இருவருமே அந்த நிலேயத்தில் சிகிச்சை பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது!
சூடுபிடிக்கிறதே விஷயம்!


'கேப்ரியல்-அமைப்பு என்று கார்வின் எழுதியிருப்பதன் உட்பொருள்...?
திட்டமிட்ட சதிச் செயல் பெரிய அளவில் நடந்து கொண்டிருக்கலாம்!
நிஜமாகவே 'கேப்ரியல் என்று ஒருவன் இருக்கிருனு...? சர்வதேச சதித் திட்டங்களின் மூலகர்த் தா என்ற அளவில் அவன் பெயரை மட்டும் கேள்விப்பட்டிருக்கிறோம்!
இருக்கிருன்- ஒரு முறை... நானே நேரில் சந்தித்திருக் கிறேன்!
கேப்ரியல் பற்றி விபரமாக கூறு...!
ஒரே ஒரு தடவை, அவனை சந்தித்திருக்கி றேன்... கும்பலுக்கு நான் தலைமை வகித்து வந்த சமயம்-கொள்ளை யடிக்கத் திட்டமிட்டி ருந்தோம்...
கேப்ரியலின் குழுவும் அதே முயற்சியில் இறங்கியிருந்தது.. ... என்னுடைய முயற்சியை கைவிட்டு ஒதுங்கிக் கொள்ளு மாறு கேப்ரியல் எச்சரிக்கை விடுத்தான்-பெருந்தொகையை முன் வைத்து...!
ஏற்றுக் கொண்டா யாக்கும்...?
அதுதான் விவேகமான காரியமாகப்பட்டது!


உன்னை தொந்தரவு பண்ண வேண்டாமே என்றுதான் நினைக்கிறேன் ஆனாலும்-
பரவாயில்லை .. வின்னிபெக்கிற்கு உடனே வருகிறேன் என்று வில்லிக்கு தகவல் தெரிவித்துவிடுகிறேன்.
அங்கே-
மார்லின்... நான் சொல்வதை கொஞ்சம் பொறுமையாகத் தான் கேளேன்!
மாட்டேன்... இங்கிலாந்திலிருந்து வருகிற அந்தப் பெண் யார்...? பதில் சொல்லுங்கள்!
விமான நிலையம் சென்று மாடஸ்டியை அழைத்து வந்தார் கார்வின்...
எங்களுடைய அறைக்கு அடுத்த அறையை உனக்கு ஏற்பாடு செய்திருக் திருக்கிறேன்- இளவரசி!
மார்லின் எப்படிப் பட்ட பெண்...?
அவளால் நமக்கு பிரச்னை என்றால் சொல்-தூர எறிந்து விடுகிறேன்!
லூமினர் ஹோட்டலில்...
இதோ... நம் பழைய தோழி- ஜேன் லெஸ்டர்!
என்ன... புதிதாக ஏதோ சொல்கிறாய்?
யாரோ...மாடஸ்டி பிளெஸி என்பவளை அழைத்துவரப் போவதாக அல்லவா சொன்னாய்?
உளவு வேலையில் நிஜப் பெயர்களை பயன்படுத்த முடியாது! அதான் இந்த பெயர் மாற்றம்...!


வில்லி வெளியேறியதும்...
ஹலோ-மர்லின்! நம் வில்லி எப்படி நடந்து கொள்கிறார்?
நம்முடைய என்றால்? உன்னுடைய வரா-என்னுடையவரா?
அப்படியெல்லாம் நீ கவலைப் பட தேவையே இல்லை மர்லின்! நாங்கள் தொழில் ரீதியாக நெருங்கியவர்கள் அவ்வளவுதான்!
சந்தோஷம்!
ஆனாலும் உனக்கு ஒரு சின்ன அறிவுரை! இப்படியெல்லாம் ஆசையை வளர்த்துக் கொள்ளாதே-நடைமுறை உண்மைகள் கசப்பானவை!
மாடஸ்டியும் நீயும் பேசி ஒருவரையொருவர் புரிந்து கொண்டீர்களா?
ரொம்பவும் புதிரான பெண் அவள்!
நான்-பெரிய செல்வந்தர் வீட்டு செல்லப் பெண்-தான்! வாங்க முடியக் கூடிய எதையும் நினைத்த உடன் என்னால் வாங்கி விட முடியும் தான்!
அப்படியெல்லாம் பேசாதே!
ஆ-ஆனால் இன்றோ-பரிகொடுக்க முடியாததொன்று இருந்தும், அதனை என்னோடு தக்க வைத்துக் கொள்ள முடியாதோ என்று பயமாகயிருக்கிறது. என்னைப் பிரிந்து விடுவாயா வில்லி?



கையில் அகப்பட்டதை என்மீது நீ வீசியெறியும் அந்த விளையாட்டே தேவலாம் போலிருக்கிறது- இந்தா பிடி-
உன்னைப் பிரிந்து என்னால் உயிர் வாழவே முடியாது வில்லி!
மாடஸ்டியின் அறையில்...
யாரது-வில்லியா- இதோ வந்து விட்டேன்!
ஸாரி, நான் வில்லி அல்ல- உள்ளே வரலாமோ?
வில்லியிடமே கேட்கலாமே?
என்ன விவகாரம்- இங்கே?
இவன் விமான நிலையத்திலிருந்தே என்னைப் பின்தொடர்ந்து வருகிறான்-
யாரும் அறியாவண்ணம் பின் தொடருவதில் கில்லாடி என்னை நானே பாராட்டிக் கொண்டதுண்டு- நீங்கள் என்னைவிட சாமர்த்தியசாலி தான் என்பது ஊர்ஜிதமாகி விட்டது!
என் பெயர் ஸாம் கனடா உளவுத்துறை-யைச் சேர்ந்தவன். உங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு எனக்கு உத்தரவு!


உங்களுக்கு எந்த அளவுக்கு கேப்ரியலைப் பற்றி தெரியும் ஸார்?
ஏதுமில்லைதான்-மூன்றாண்டுகளுக்கு முன் முக்கிய இராணுவ இரகசியங்களை சிலர் எதிராளிகளுக்கு விற்ற விபரம் தெரிய வந்தது!
வேலைதான் என்பது எங்கள் யூகம், நேரடியாக, அவன் பேரம் பேச வருவதில்லை-யாதலால் அவனைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள முடியவில்லை!
சரி விஷயத்துக்கு வருவோம். வீனஸ் மனோ நிலையத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?
சில மாதங்களுக்கு முன் நாங்கள் இரகசியமாக அதன் நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்து விட்டோம்-சந்தேகப்படும்படியாக ஏதும் கண்ணில் படவில்லை!
நரம்பு சம்பந்தப்பட்ட தொல்லைகளுக்கு புத்துணர்ச்சியூட்டும் சிகிச்சை நடக்கிறது அங்கே, திறமையான ஆட்கள்-நவீன கருவிகள்-புது யுக்திகள்-பணம் வந்து கொட்டுகிறது, சட்டவிரோத காரியங்களில் ஈடுபட வேண்டிய அவசியம் அவர்களுக்கு கிடையாது!
சிகிச்சை என்ற பெயரில் நான் அங்கே நுழைய ஏற்பாடு செய்யுங்கள் ஸார்!
77



பின்னர்-வீனஸ் மனோ நிலையத்தில்-
ஓ கே. மிஸ் லெஸ்டர்-நீங்கள் இங்கே சிகிச்சை பெறலாம்!
முதலில் இன்று பிற்பகல் ஒரு மருத்துவ சோதனையும், மனோ தத்துவ சோதனையும் இருக்கும். அவற்றின் அடிப்படையில் உங்களுக்கு கடை-பிடிக்க வேண்டிய சிகிச்சை முறையை திட்டமிடு-கிறோம்!
நன்றி டாக்டர்!
நமக்கு உபயோகப் படுவாளா-இந்தப் புது 'நோயாளி'?
இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிறாள்-அப்பா, ஜாம் தயாரிக்கும் கம்பெனி முதலாளி-பெரும் பணக்காரர்-
கைப்பை நிறைய மாத்திரை மருந்துகளை வைத்துக் கொண்டிருந்தால் அவற்றை எடுத்து நர்ஸிடம் கொ-டுத்து விடுங்கள்-
Jane Leslar
நம்முடைய பங்கு மார்கெட் பைலில் போட்டுவைக்கும் படியான தகவல் ஏதும் வெளிவந்தால்தான் உண்டு.
பார்க்கலாம்!



நைட்-கிளப் ஒன்றில்–
மாடஸ்டி எங்கே-திடீரென்று மறைந்து போனாள்!
அவள் விரலை அசைத்ததும் நீ அவள் பின்னால் விழுந்தோடிப் போய்விடுவாய்- ஏமாற்றுப் பேர்வழி நீ!
அதோ... ஸாம்!
இங்கேயே இரு மர்லின்-ஒரு நபரை பார்த்துப் பேசிவிட்டு ஓடிவந்து விடுகிறேன்!
ஏதாவது செய்தி உண்டா-ஸாம்!
ஆமாம்-வீனஸிலிருந்து 20 மைல் தொலைவில் இருக்கும் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருக்கிறது ஒரு கூட்டம்!
பெரும்பாலோர் அயல்நாட்டு வியாபாரிகள்-அவர்களுடைய நோக்கம்தான் தெளிவாகவில்லை.
எனவே?
அவர்களில் ஒருவனாக கேப்ரியல் இருப்பானோ என்றொரு சந்தேகம்!


வீனஸில் -
இன்னும் ஐந்து நிமிடங்கள் தான்...மிஸ் லெஸ்டர்!
பத்து நிமிடங்களுக்குப் பின்-
இவர்கள் மஸாஜ் செய்யும் முறையே தனி —!
'சொர்க்கப்' 9ல் உனக்கு சிகிச்சை நடந்து விட்டதா?
இன்னும் இல்லை— நாளை நடக்கும்!
மறுநாள்-
இசை மனதை வருடுகிறமாதிரி வருகிறதா, மிஸ் லெஸ்டர்?
யெஸ்! இந்தப் படுக்கை எத்தனை இதமாக இருக்கிறது!
உடலையும், மனத்தையும் தளர்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்!
புதுமையான அனுபவமாக இருக்கிறது!
இனிய அனுபவம் என்றும் சொல்லலாமில்லையா?
ஓ.கே-டேப்பை ஓடவிடுவோம்!


மெல்லிய இசை செவியில் விழ-மேலே நிதானமாக அலைந்து கொண்டிருக்கும் மீன்களை கவனித்தவாறு மென்மையான படுக்-கையில் படுத்திருந்தாள் மாடஸ்டி.
அந்த இன்னிசையோடு கலந்து மிக மிருதுவான குரலில் சில செய்திகளும் வரத் தொடங்கின...
உன்-உடலும் மனமும் தளர்ச்சியடைந்திருக்கின்றன - தூக்கம உன்னை அரவணைக்கிறது...
உன் இமைகள் மெள்ள மூடிக் - கொள்கின்றன-
மேலே இருந்த மீன் தொட்டியினுள் ஏதோ ஒன்று லயமாகப் பளிச்சிட்டு மறைந்து கொண்-டிருந்தது
மாடஸ்டி நிதானிப் பதற்குள் தூக்கம் ஆட்கொண்டு விட்டது...
தூக்கம் உன்னை அரவணைக்கிறது!
தூங்கு... தூங்கு...
ஆழ்ந்த தூக்கம்...
ஐந்தே நிமிடங்கள்-ஹிப்னாட்டிஸ மயக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்-
200 வோல்ட் மின்சார அதிர்ச்சி மாடஸ்டியை தாக்கி மறைகிறது ஆனால் அவளிடம் எந்த அசைவும் இல்லை...



எதிரிகளின் வலையில்தான் வீழ்ந்து விட்டது மாடஸ்டிக்குத் தெரியாது...
உன் மனதில் நிம்மதி நிலவுகிறது ..
இனி நேரடியாக உரையாடத் தொடங்கலாம் ஆரம்பத்தில் சில வழக்கமான கேள்விகளை கேட்கப் போகிறேன்!
ஹிப்னாட்டிஸ உத்தரவுகளை நிறுத்தி விடலாம்.
மெல்லிய முணுமுணுப்பாக வந்த வார்த்தைகள் மாடஸ்டியின் செவியினுள் புகுந்தன...
இப்போது உன்னைப் பற்றிய விபரங்களை கூறப்போகிறாய் எதையுமே மறைக்காமல் எல்லாவற்றையும் என்னிடம் சொல்ல விரும்புகிறாய்.. !
உன் பெயர் என்ன?
நான்– எ எனக்குத் தெரியாது!



கண்ட்ரோல் அறையில் -
இது என்ன விபரீதம்! சொந்தப்பெயர் கூடவா தெரிந் திருக்காது?
தெரியாது என்று அவள் சொல்கிறாள் என்றால் அது தான் உண்மை. ஹிப்னட் டிஸ மயக்க நிலையில் பொய் சொல்ல முடியாது! வேறு விதமாக முயன்று பார்ப் போம!
நீ-யார்?
நான்-நான்-
மாடஸ்டி பிளைஸ்!
ஜேன் லெஸ்டர் என்றல்லவா பதிவு செய்திருந் தான்! ஏதோ விஷமம் உள்ளது!
என் பெயரை மாற்றி குறிப்பிட் டாய்?
நீ ஏன் இங்கே வந்தாய்? உன்னை யாராவது அனுப்பி வைத்தார்களா?
யார் உன்னை அனுப்பியது?
மேலும் கேள்விகள் தொடர்ந்தன...
பதிலே இல்லை! ஆழ்ந்த மயக்க நிலையை ஏற்-படுத்த தவறி விட்டாயோ?
இல்லை! அவளுடைய உள்ளுணர்வு ரொம் பவும் விழிப்போடு இருப்பதால் ஊடுருவ முடியவில்லை!
என் கட்டளைகளுக்கு விட்டுக் கொடுக்காது எதிர்த்துப் போராடுகிறது அவளது உள்மனது!
தொடர்ந்து முயற்சி செய்-ஜான்-அவள் ஏதாவது பேசினாள் என்றால் எனக்குத் தகவல் கொடு!


டாக்டர் வார்லே? ஒருமணி நேரம் எப்படியெல்லாமோ முயன்று பார்த்து விட்டேன் ஊஹூம் - பலனில்லை!
இனியும் முயற்சியைத் தொடர்ந்தால், விழித்தெழும்போது இந்த ''மனோயுத்தம்'' அவளுடைய நினைவுக்கு வந்துவிடும் அபாயமுண்டு.
ஆல்ரைட் - ஜான்! இனி நிஜமாகவே சிகிச்சையை தொடங்கு - அவள் எழும் போது எந்த சந்தேகமும் ஏற்பட்டு விடக் கூடாது!
நான் பத்து எண்ணி முடிக்கும் போது நீ விழித்துக் கொண்டு விடுவாய் - மனம் தெளிவடைந்து புத்துணர்ச்சியோடு இருக்கும் - ஒன்று இரண்டு -
எட்டு - ஒன்பது - பத்து -
ஓ! என்ன டாக்டர் - சிகிச்சை முடிந்ததா?


அதே சமயம்- ஏரிக்கரை பங்களா அருகே அங்கே நடப்பவைகளை கவனித்துக் கொண்டிருந்தனர்- வில்லி கார்வினும், ஸாம் பார்த்தும்!
யாரோ வெளி வருகிறார்கள்- பார்!
அவன் வெரி- கேப்ரியலுக்கு தோஸ்து!
வெளியிலிருந்து கார் ஒன்று உள்ளே வருகிறது . கவனி!
அவன் - ரிக்கோ-கேப்ரியலின் செக்ரடரி-கேப்ரியலை விட்டு நாலடி தூரத்திற்கும் அதிகமாக எப்போதுமே விலக மாட்டான்!
அதோ-அவன் -கேப்ரியல் தன் உயர் மட்ட அதிகாரிகள் அனைவரையும் இங்கே வரவழைத்திருக்கிறான போலும்!
என்ன நோக்கமோ?
வருடாந்திர மீட்டிங்காக இருக்கலாம்-அறிக்கை சமர்ப்பிப்பது-ஆலோசிப்பது- அங்கே காணப்படுபவர்கள் அடிமட்ட ஊழியர்களல்ல மேல்மட்ட நிர்வாகிகள்!
உள்ளே —
வீனஸில் ஏதோ மர்மமாம்! வார்லே போன் செய்தார்!


வார்லே- என்ன விஷயம்?
இங்கே ஜேன் லெஸ்டர் என்று சொல்லிக் கொண்டு வந்த ஒரு பெண்ணுக்கு 'சொர்க்கம்-9' பிரிவில் சிகிச்சை யளித்தோம்...
ஆழ்ந்த ஹிப்னட்டிஸ மயக்கத்தில் ஆழ்த்திய பின்னும் தன் உண்மைப் பெயர் மாடஸ்டி பிளைஸி என்பதை தவிர வேறு எதையும் வெளியிடவில்லை அவள்!
அந்தப் பெயர்- உங்களுக்கு பரிச்சயமாக இருக்குமோ என்றொரு சந்தேகம் எனக்கு!
பேசுவதை நிறுத்தி விட்டு நான் சொல்வதை கவனமாகக் கேள்!
நமக்கு பழக்கமான மாடஸ்டி பிளைஸி வீனஸுக்கு சென்றிருக்கிருள்...
இரண்டாண்டு-களுக்கு முன்குறித்த் தொழிலை விட்டு விட்டதாக கேள்விப் பட்டேனே!
வார்லே! வழக்கமான முறையில் அவளை டிஸ்சார்ஜ் செய்-அவள் தங்கியிருக்கும் விலாசத்தை எனக்குத் தெரிவி மிச்சத்தை நான் பார்த்துக் கொள்கிறேன்!
ஓ. கே-பாஸ்! நாளை அவள் டிஸ்சார்ஜ் செய்யப்படும் நாளாகும்- அவள் ஹோட்டல் லூரமினரில் தங்கியிருக்கிருள்!


மறுநாள்—
நல்ல முறையில் சிகிச்சையளித்த தாக கருதுகிறோம்-
ஆமாம்! எத்தனே மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா?
அத்தியாயம்-2
தேப்பியவுடன் ஒரு சந்திப்பு!
இரண்டு மணி நேரம் கழித்து-ஓமினரில்-
உன் கனவுக் கன்னி திரும்ப வந்தாயிற்று-வில்லி!
என் கனவுக் கன்னி நீதான் மர்லின்...
மாலேயில்—
டான்ஸ் ஆடலாமா மாடஸ்டி!
இவனுக்கு உன்னோடு பேசவேண்டும் அதுதான் நிஜம்!
வீனஸில் என்ன நடந்தது-இளவரசி?
மர்மமாக எதும் இல்லே! ஆனல் இன்னதென்று விளங்கிக் கொள்ள முடியாததொரு அனு-பவம் ஏற்பட்டதாக ஒரு சந்தேகம்!
என்னேப் பேச வைக்க ஒரு நிர்ப் பந்தம் ஏற்படுத் தப பட்டதாக என் உள்மனம் சொல்கிறது!
87


சிகிச்சையின் போது மருந்துக்களை பயன் படுத்தினார்களா?
கிடையாது! நான் அதில் கவனமாக இருந்தேன்— என்னை அவர்கள் தூக்கத்தில் - மயக்கத்தில் ஆழ்த்த முயற்சிக்கவேயில்லை!
சிறு பொறியாக ஒரு சந்தேகம்—
'சொர்க்கம்-9'ல் சிகிச்சை நடந்த போது, இரண்டு மணி நேர அவகாசம் பத்தே நிமிடங்களாக தோன்றியதுதான். ஏனென்று விளங்கவில்லை. அங்குதான் விஷயம் இருக்கக்கூடும்!
வில்லி-அந்த அமைப்பை நாம் ஆராய வேண்டும்.
ஓ...கே- எப்போது?
நாளை இரவு! அதற்கு முன் சாத்தியமில்லை. அதன்பின் ஒத்திப் போடுவதும் நல்லதல்ல- அதுவும் கேப்ரியல அருகிலேயே இருக்கையில்!
ஹலோ-மர்லின்-ஏன் டல்லாக இருக்கிறாய்!
சரி-அதற்கான ஏற்பாடுகளை இப்போதே செய்கிறேன்!
வில்லி-கொஞ்ச நேரம் எங்காவது போய்விட்டு வா- நான் மாடஸ்டியோடு தனியாகப் பேச வேண்டும்.



என்ன விஷயம்- சொல் மர்லின்!
என் வாழ்நாளில் இதுவரை நான் யாரிடமும் எதற் கும் கெஞ்சியதே இல்லை-
ஆனால் இப்போது நான் படும் அவஸ்தையை நீ அனுபவித்திருக்கவே மாட்டாய்!
என்னை உனக்குத் தெரியாது- நீ கார் கள் வாங்கிக் கொண்டிருக்கும் நாள்களில் நான் பசியைப் போக்க பிச்சை எடுத்துக் கொண்டிருந்தேன்!
அப்படியானால் பிச்சை எடுப்பது எப்படி என்று சொல்லிக் கொடு- ஒரு மனிதரை நான் யாசகம் கேட்டுப்பெற வேண்டியிருக்கிறது.
ஒருவரால் தர முடியாததை நீ பிச்சை கேட்க நினைக்கிறாய் மர்லின்!
நீயும், வில்லியும் சேர்ந்து மேற்கொண்டிருக்கும் பணி முடிந்ததும் உன்னோடு அவரை அழைத்துச் சென்று விடாதே-ப்ளீஸ்!
நிச்சயமாக அவரை அழைத்துச் செல்ல மாட்டேன்!
ஆனால் அவரை இங்கே தங்க வைப்பதும் என்னாலாகாது!
அது என்னால் முடியும்- நீ மட்டும் போட் டிக்கு வரா- விடில்!
மதுபான பிரிவில்-
ஹலோ-வில்லி- எங்கே உன் பாஸ்? அவளோடு நான் கொஞ்சம் பேச வேண்டும்!
அட- நீ- லெரி தானே!


கேப்ரியல் உன்னை சந்திக்க விரும்புகிறார்.
எங்கே? எப்போது? எதற்காக?
ஏரிக்கரை பங்களா வில்-நாளை காலை பத்து மணிக்கு! விஷயத்தை அவரே நேரில் கூறுவார்.
ஆல்ரைட்! வெரி-அவசி யம் வந்து சேருகிறோம்!
மறுநாள் காலை—
வில்லி, எங்கேயும் நீ செல்வதை நான் விரும்ப வில்லை-நேற்றிரவு வந்த ஆசாமியின் முழியே சரியில்லை!
அலட்டிக் கொள்ளாதே-மர்லின்!
கேப்ரியல் என்பது யார்-எதற் காக கத்திகளை எடுத்துக் கொண்டு போகிறாய் - பதில் சொல்லிவிட்டுப் போ-வில்லி!
வில்லி-கத்திகளை எடுத்து வர வேண்டாம்-அதற்கெல்லாம் அவசியம் இராது!
90


அவள் சொல்வதெல்லாம் உனக்கு வேதவாக்கு-போடு தோப்புக் கரணம் என்ருல் எண்ணிக் கொள் என்பாயோ?
இந்த இடத்தில் நாம் நெடுஞ் சாலையிலிருந்து பிரிய வேண்டும்-
ஓ...கே!
அங்கே நமக்கு ஆபத்து நேரிடாது என்கிருயா?
ஆமாம்—நம்மை எச்சரிக்கை செய்வதே அவன் நோக்கமாக இருக்கும்-முன்பு ஒரு முறை அப்படித்தானே செய்தான!
சில நிமிடங் களுக்குப் பின்-
டாண் என்று நேரப்படி வந்துவிட்டார்கள்... பாஸ்!
புத்தி சாலிகள்!
நாங்கள் வந்து விட்டோம் என்று கேப்ரியலுக்கு தெரிவியுங்கள்!
ஏற்கனவே தெரிவித்து விட்டோம்-அசையாமல் நில்-சோதனை-யிட வேண்டும்.
கத்தி ஏதும் எடுத்துவர வில்லையே?
நானு? சே - நான் அகிம்சைவாதி அப்பனே!


எங்களை எதற்காக வரவழைத்தீர்கள்- பிரச்னை என்ன?
நான் வரச் சொல்ல வில்லை-எந்தப் பிரச்னையும் எனக்குக் கிடையாது!
வீனஸில் மாற்றுப் பெயரில் உள்ளே வந்து போயிருக் கிறாய் - உன் நோக்கம் என்ன?
அது என் இஷ்டம்! காரணம் தெரிய வேண்டுமானால்- அதற்குரிய விலையை பேரம் பேசு!
வாழு-வாழவிடு நாங்களொன்றும் உங்கள் வழியில் குறுக்கிட வில்லையே!
தவறான கணிப்பு- கார்வின்!
முன்னர் ஒரு தடவை என் வழியில் குறுக்கிட்டாய்- நான எச்சரித்ததும் புத்தி சாலித்தனமாக ஒதுங்கிக் கொண்டாய் - மீண்டும் இப்போது சொல்கிறேன்-
உங்கள் திட்டம் எதுவானாலும் மேலே தொடராமல் ஒதுங்கிக் கொள்ளுங்கள்-
என் நேரமும்-பணமும், நிறைய இதில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது- என்ன தொகை தருவாய்?
விலை மதிப்பில்லாத பரிசு! இப்படியே ஒதுங்கிக் கொண்டாயானால் தொடர்ந்து உயிர்வாழ அனுமதிப்பேன்!



என் எதிர்பார்ப்பு என்னவென்று சொல்லட்டுமா?
அவ்வளவுதான் பேச்சு-நீ உடனே கிளம்புகிறாய்-என் விவகாரத்திலிருந்து ஒதுங்கிக் கொள்கிறாய்?
உங்களை எச்சரித்து அனுப்புவதற்கும் கொன்று தோட்டத்தில் புதைப்பதற்கும் அதிகம் வித்தியாசம் இல்லை-புரிகிறதா?
ஆல்ரைட்! எங்களுக்கு எவ்வளவு அவகாசம் உண்டு?
உன் புத்திசாலித்தனமான முடிவுக்குப் பரிசாக இருபத்தி நான்கு மணி நேரம் தருகிறேன்!
பயலை ஏமாற்றி விட்டாய்-இளவரசி!
தான் ஏமாந்து போனதை அறிந்தவுடன நம்மைக் கொல்ல ஏற்பாடு செய்யத் தவற மாட்டான்!
இங்கேயும் அவனுக்கு 'அடியாட்கள்' இருப்பார்களா-என்ன?
அடியாட்கள் எதற்கு? இப்பொழுது உடனிருப்பவர்கள் இன்று நாற்காலியைத் தேய்த்துக் கொண்டிருப்பவர்களேயானாலும் ஆரம்ப நாட்களில் முரட்டுக் காரியங்களை செய்தவர்கள் தான்!



நள்ளிரவில் தற்செயலாக விழித்துக் கொண்ட மர்லின் கார்லினைக் காணாது திகைத் தாள—
வில்லி?
வில்லி-என்ன செய்து கொண்டிருக்கிருய்?
ஒரு வேலையை முடிக்க கொஞ்சம் வெளியே போய்க் கொண்டிருக் கிருேம்...
நீ கத்திகளை வைத் துக் கொண்டிருக் கிருய்- அவளிடம் துப்பாக்கி இருக் கிறது?
மர்லின்- அனுவசிய மாக குறுக்கிடு கிருய்!
அவளோடு போகாதே-வில்லி!
தூக்க மாத்திரை இரண் டை போட்டுக் கொண்டு நிம்மதியாகத் தூங்கு!
தொணத் தொணக்கும் பெண்களை எனக்குப் பிடிக்காது! புரிகிறதா?


வீனஸ் மன நிலையத்தில்
ஒரே ஒரு தாழ்ப் பாள் தான்-
இதோ- திறந்து கொண்டு விட்டது!
படுக்கையிலிருந்து ஏதாவது வயர் செல்கிறதா என்று பாருங்கள் வில்லி- எங்கிருந்தோ இன் னிசை வரும் ஏற்பாடு உண்டு!
மூன்று நிமிடங் களுக்குப் பின்-
ஹாங்! இசையை ஒலிபரப்ப இவ் வளவு தடபுடல் ஏற்பாடு அவசியமா?
விளக்கைப் போட் டுக் கொண்டு ஆராயலாம் - ஜன்னல்கள் இல்லை.
கால்மணி நேர ஆராய்ச்சிக்குப்பின்-
இப்படித்தான் இது செயல்படுகிறது- பின்னணி இசை யைப் போட்டு, காட்சியமைப்பையும் தூண்டுகிறேன், கவனி!
உடலும், மனமும் தளர்ச்சி யடைகின்றன —தூக்கம் உனை அரவணைக்கிறது.
ஆக, தன்னையறியாமலேயே பேஷண்ட் ஹிப்னாட்டிஸ மயக்கத்தில் ஆழ்ந்து விடுகிறான்- ஆல்ரைட்- இனி வார்லேயின் அலுவல் அறையை சோதனையிடலாம்!
தூங்கு... ஆழ்ந்த தூக்கம்.


பேஷண்ட் தன்னையறியாமல் வெளிப்படுத்தும் தகவல்களை கொண்ட பைல்கள் வார்லேயின் அறையில் இருக்கக் கூடும்!
கேப்ரியலின் மற்ற அமைப்புகள இந்தத் தகவல்களை வாங்கி செயலில் இறங்கக் கூடும்!
ஸ்ஸ்ஸ்ட்!
இரண்டாவது முயற்சியில் கொக்கி மேலே பற்றிக் கொண்டு விட்டது...
இந்த ஃபைல்களை மட்டும் டர்ராணட் பார்த்தால் குதிப் பார்!
அத்தனையையும் அள்ளிக்கொண்டு போக முடியாது. சமீபத்திய பைல்கள் இதோ இருக்கின்றன.
இவைகளை பின், ஒரு நாளில் மீண்டும் திருப்பிப் பார்க்க மைக்ரோ பிலிமில் பதிவு செய்து பராமரித்து வருவார்கள் என்று எண்ணுகிறேன்-
மேல் மாடியில் வார்லேயின் படுக்கை அறையில்—
கேப்ரியல் பேசுகிறேன்- 'விருந்தாளிகள்' அங்கே உள்ளே நுழைந்திருக்கிறார்கள்-
96


பெட்டகத்தைத் திறப்பதில் முழுக் கவனம செலுத்திக் கொண்டிருந்தார் கார்வின்...
சங்கேத எண்ணை சரியாக திருப்பி-னால்தான் இது திறந்து கொள்ளும்-
இதோ-திறந்து கொண்டு விட்டது!
உள்ளே . பார்!
இருபது நிமிட முயற்சி வீண் போகவில்லை!
மைக்ரோ-பிலிம்கள்!
அட்ட காசம்!
பெட்டியினுள் அள்ளிப்போட்டு விட்டுக் கிளம்பு வோம்!
ஒரு நிமிஷம்! தொல்லை தேடி வருகிறது மாடஸ்டி!


கேப்ரியலின் ஆட்கள்தான்- நம் காரையும் கவனித்து விட்டிருப்பார்கள்
அவர்களுடைய கவனத்தை நான் திசை திருப்புகிறேன்-மைக்ரோ-பிலிம்களோடு நைஸாக நழுவிச் சென்று விடுங்கள்!
அப்படியில்லை- குறுக்கே வெகு தூரம் ஓடிச் சென்றால்தான் தப்ப இயலும்- உங்களால்தான் அது முடியும்.
ஒரு சிறு திருத்தம்- நான் அவர்களை கவனித்துக் கொள்கிறேன- நீ -
நீ எப்படித் தப்பி வருவாய்?
கொஞ்ச நேரம் போக்குக் காட்டி விட்டு அவர்களுடைய காரை கிளப்பிக் கொண்டு வந்துவிட நினைக்கிறேன்.
அங்கே, யாராவது தென்படுகிறார்களா ப்ரெம்? யாரோ ஜன்னல் வழியாக கீழே இறங்கி வருவது தெரிகிறது- அந்த பெண்ணாக இருக்கக் கூடும்!
நீங்கள் மூன்று பேரும் அங்கே நின்று காரினை கவனித்துக் கொள்ளுங்கள். நாங்கள் இந்தப் பெண்ணை கவனிக்கிறோம்.



கையிலிருந்த கொக்கியை சுழற்றி எறிந்தாள் மாடஸ்டி!
ஆவ்...வ்!
லாவகமாக மின்னல் வேகத்தில் வந்து விழுந்த உதை நார்ஸ்டெனின் கரத்தை மரத்துப் போகச் செய்தது.
அவனுடைய கையைப் பற்றி சுழற்றி வீழ்த் தினாள்—
சத்!
நார்ஸ்டெனை வீழ்த்தி விட்டாள்-ப்ரெம்- அங்கிருப்போரை மேல்திசையில் வளைத்து வரச் சொல்...
கிழக்கே ஒளிந்து கொண்டிருந்த கார்வின் குறுக்கீடு இன்றி தன் பாதை சீராகி விட்டதை கவனித்தார்-
மாடஸ்டியின் திட்டத் தில் ஒரு பகுதி வெற்றி யடைந்து விட்டது- இனி அவன் தப்பி வெளி யேறுவது அதிர்ஷ்டத் தை பொறுத்தது.


சைலன்ஸர் பொருத் தப்பட்ட துப்பாக்கி யிலிருந்து குறிவைத்து வந்தது ஒரு தோட்டா-
டூம்!
இவளை வளைக்கும் முயற்சியில் நாம் காரினை கோட்-டை விட்டு விட் டோம் என்று நினைக்கிறேன்-
அவளை இந்தப் பக்க யாக ஒதுக்குங்கள்-நான் கிரீவியரை அழைத்துக் கொண்டு உன்னை வந்து சந்திக்கிறேன்.
எஞ்சினை ஓடவிட்டவாறு காருக்குள் ளேயே இரு ரிக்கோ-பினியை வளைதது‌ப் பிடித்ததும், காரினை துரத்திக் கொண்டு செல்ல வேண்டும்-
மாடஸ்டி திகைத்தாள்—
பதிலுக்கு சுடுவதில் அர்த் தமேயில்லை - ஏகப்பட்ட துப்பாக்கிகள் எனக்கு எதிராக இயங்கவிருக்கின்றன-
முகத்தையும், கைகளையும், துணியால் மூடிக்கொண்டு மரததோடு ஒடுங்கி அசை வற்று நின்றாள-


அவனை தேடி வந்தவர்கள் தாண்டிச் சென்றனர்–
என்னுடைய காரை அவர்கள் காத்து நிற்பது உறுதி– எனவே அவர்களுடைய காரை குறிவைக்க வேண்டும்!
வீழ்ந்து கிடந்த நார்ஸ்டென் சுய-வுணர்வு வரப் பெற்று எழுந்தான்.
நான அவனைக் கொல்லாமல் விடப் போவதில்லை!
காரினுள் இருக்கும் வரை அவனை ஏதும் செய்ய இயலாது...
இயங்கிக் கொண் டிருக்கும் எஞ்சினை நின்று போகச் செய்து விட்டால் 'பானட்' திறந்து ஆராய நிச்சயம் வெளியே வருவான்.


காற்றுப் போக்கி குழாயை துணியால் அடைத்தாள். எஞ்சின் சற்று நேரம் திணறி விட்டு பின்னர் இயக்கமிழந்து போனது மீண்டும் அதை இயங்கச் செய்ய முயன்று தோற்றுப் போனான் ரிக்கோ-
ஏன் நின்று விட்டது?
காரைவிட்டு கீழே இறங்கினான் ரிக்கோ.
சத்!
ரிக்கோ தரையில் வீழ்ந்த அதே கணத்தில் நார்ஸ் டென் அங்கே வந்து சேர்ந்தான்–
ஆஹ்!
டுமீல்
மாடஸ்டியின் துப்பாக்கி ஒரு முறை முழங்கியது.
இந்த சப்தம் பிறர் கவனத்தை கவரக் கூடும்-இங்கிருந்து விலகி ஓடிப்போய் விடவேண்டும்.


நார்ஸ்டென்-அங்கே என்ன குழப்பம்?
தப்பியோடுகிருள்-
அவளுடைய காரில் ஏறி துரத்திச் செல்லுங்கள்-நான் நார்ஸ்டெனை வீனஸுக்கு எடுத்துச் சென்று, கேப்ரியலுக்கு போன் செய்கிறேன்.
நிச்சயம் கேப்ரியல் நம் தோலை உரிக்காமல் விடப்போவதில்லை!
டாக்டர் வார்லே நார்ஸ்டெனுக்கு சிகிச்சையளிக்கையில்...
ஆமாம், பாஸ்-மாடஸ்டியை துரத்திக் கொண்டு போயிருக்கிருர்கள். ஆளுல் மைக்ரோபிலிம்கள் கார்லின் வசம் இருக்கும் போலிருக்கிறது.
காயத்தின் மீது நீ அழுத்திக்கொண்டிருந்த இந்தத் துணி, ஏது உனக்கு?
அவளுடைய ஸ்வெட்டர்! அது அங்கே கிடந்தது-அங்கு எப்படி வந்ததோ எனக்குத் தெரியாது.
ஹலோ-பாஸ்-விஷயம் கை நழுவி போய்க் கொண்டிருப்பது என்னவோ உண்மைதான்-ஆனால் புதிதாக ஒரு பிடி கிடைத்திருக்கிறது நமக்கு-கவனமாக கேளுங்கள்-அவள் அணிந்திருந்த ஸ்வெட்டர்
இரவின் நிசப்தத்தை கிழித்தவாறு விரைந்து சென்று கொண்டிருந்தன இரண்டு கார்கள்-



என் காரில் ஏறி என்னைத் துரத்தி வருகிறார்கள்-கூடுதல் வேக ஆற்றல் கொண்டது அது!
இந்தச் சாலை எங்கே போகிற தென்று விளங்க வில்லையே-
அமெரிக்க எல்லை இன்னும் மூன்று மைல் தொலைவில் இருக்கிறது-அதை நெருங்குமுன் அவளை தடுத்து நிறுத்த தவறி விட்டால் தோற்றுப் போய் விடுவோம!
அதை இந்தக் காரிடம் சொல்லு!
நிறுத்து - எல்லை சாவடி-அதோ!
ஆனால் முன்னால் சென்று கொண்டிருந்த மாடஸ்டி வேகத்தை மட்டுப்படுதத வில்லை!
ஆமாம்-ஆனால் நிற்கா மல் போய்விட-ஆங்! அதோ காரை நிறுத்தி விட்டாள்!
ஹே-அந்தக் காரில் போகிறவள்-சட்டை ஏதும் போட்டுக் கொண் டிருந்த மாதிரி தெரியவில்லையே!
கனடா நாட்டு பகுதியில் கேப்ரியலின் ஆட்கள் காரை திருப்பிக் கொண்டு போனார்கள்.


இந்தாருங்கள் என் வச முள்ள ஒரே ஆயுதம்-கனடா உளவுத் துறை யினருக்கு என்னைப் பற்றி தகவல் கொடுக்க வேண்டும்.
முயற்சி செய்வோமே!
மைக்ரோ பிலிம்கள், கார்வின் வசம் இருப்பதால் இனி நாம் வலைவீச வேண்டியது கார்வினுக்குத் தான்!
இரத்தம் தோய்ந்த அவனு டைய ஸ்வெட்டர் நம் வசம் இருக்கிறது-அத்தோடு, அதில்—
கார்வினின் சுபாவம் எனக்குத் தெரியும். மாடஸ்டியை நாம் கொன்று விட்டதாக செய்தி அவனுக்கு எட்டினால் போதும்-பின்னர் நாம் அவனை தேடிச் செல்ல வேண்டியதில்லை. அவனாகவே நம்மைத் தேடி வருவான்!
வள வள என்று பேசிக் கொண்டிராமல், செயலில் இறங்குவோம்!
ஹோட்டல் லூமினரில் பொழுது விடிவதற்கு சற்று முன்பு—
யாரது-வில்லியா?
கத்தாதே-கார்வினுக்கு நீ தெரிவிக்க வேண்டிய செய்தி ஒன்று உண்டு-கேப்ரியலிடமிருந்து!


இதை கார்வினிடம் கொடு-மெள்ள நிதானமாக காரியத்தை முடித்து விட்டோம் என்று சொல்!
இரத்தக் கறை தோய்ந்த மாடஸ்டியின் 'ஸ்வெட்டரில் சில கீறல்களும், துளைகளும் போடப்பட்டிருந்தன!
'ஏரிக்கரை' பங்களாவில்—
சே-வெட்கமாக இல்லை-ஒரு பெண்ணிடம் ஏமாந்து போய் நிற்க!
அமெரிக்க எல்லையினுள் நுழைந்து விட்டாள்-வேறு வழியின்றி நாங்கள்-
உங்கள் அதிர்ஷ்டம்-நிலைமை இன்னமும், கை நழுவிப்போய் விடவில்லை-அங்கே அமெரிக்க போலீஸாரிடம் சிக்கி அவள் திணறிக் கொண்டிருப்பாள்-
வெரி சென்று கார்வினின் தோழியை சந்திக்கும் போது குறுக்கே வந்து காரியத்தை கெடுக்க மாட்டாள்!
என்ன நோக்கத்தில் இவள் குறுக்கிடுகிறாள் என்று நினைக்கிறீர்கள் பாஸ்!
அதைப்பற்றி எனக்கு அக்கறை கிடையாது. எனக்குத் தேவை-அந்த மைக்ரோ பிலிம்கள்!
கார்வின் அவற்றை ஒளித்து வைக்கக் கூடும்-அவனை பிடித்து விட்டால் உண்மையை வரவழைத்து விடலாம்!


மாடஸ்டியை நாம் கொன்று விட்ட கதையை நிஜம் என்று நம்பிவிட்டாள் கார்வினின் தோழி! கார்வினும், நம்பிவிடுவது உறுதி-
மாடஸ்டியா? ஸாம் பேசுகிறேன்-C.I.A. அதிகாரிகள் என்னோடு பேசினார்கள். விஷயத்தைக் கூறி உன்னை விடுவிக்கச் சொல்லி விட்டேன்!
வில்லியைப் பற்றி தகவல் உண்டா?
இனி தான் கதையே சூடு பிடிக்கும்! உஷாராக இருங்கள்!
அமெரிக்க போலீஸ் தலைமையகம் ஒன்றில்-
ஏதுமில்லை! ஏன் ஏதாவது விவகாரமா?
இரண்டு மணி நேரம் கழித்து என்னை லூமினரில் சந்தி-விபரமாக சொல்கிறேன்!
நன்றி, இன்ஸ்பெக்டர்! ஒரு வாரம் எடுத்துக் கொள்ளக் கூடிய விஷயம் உடனே தீர்ந்து விட்டது-
ஹோட்டல் லூமினரில்— விடிகாலையில்—
ஹல்லோ-மர்வின்-வந்து விட்டேன்! மாடஸ்டி இன்னும் வரவில்லையா?
ஹே-என்ன விஷயம்? ஏன் நடுங்குகிறாய்?
ம்-இங்கே ஒர் ஆசாமி, படு பயங்கரமானவன்-வந்தான்-


கேப்ரியல்?
மாடஸ்டியை கொன்று விட்டார்களாம்?
உ-உன்னிடம் ஒரு செய்தியை சொல்லச் சொன்னான் - யாரோ கேப்-ரியல் சொல்லி-யனுப்பினானாம்.
சே- ஏதோ குளறுபடி பண்-ணுகிறார்கள - அத்தனை சுலபமாக மாடஸ்டியை தீர்த்துக் கட்டிவிட முடியாது!
நிஜம்தானாம்! மெள்ள-நிதானமாக காரியத்தை முடித்துவிட்டோம் என்று உன்னிடம் சொல்லச் சொன்னான்-
இதோ- அவன் கொடுத்துச் சென்ற அவளது ஸ்வெட்டர்! ஒரே இரத்தமயம்! அங்கங்கே துளைகளும், கீறல்களும்.
என்னோடு கிளம்பி விடு, கார்வின்- அந்த கிராதகர்கள் அடுத்து உன்னைக் குறி வைக்கக் கூடும்!
மன்னித்துக் கொள் மர்லின்- எனக்கு இங்கே ஓர் அவசர வேலை இருக்கிறது!
எங்கே போகிறாய்?


வில்லி-
ப்ளீஸ்!
மாடஸ்டியின் அறையில்—
இனி மாடஸ்டிக்கு உதவ
முடியாது-சொன்னால்
கேளுங்கள்—
ப்ளீஸ்-தொண
தொணக்காதே
மர்லின!
இந்த நம்பரை
டயல் செய்து
ஸாம் என்பவனை
கூப்பிடு—
நடந்ததை அவனிடம் கூறு.
ஜேஜே கார் பட்டறையில்
மைக்ரோ பிலிம்கள் அடங்கிய
பெட்டியை நான் விட்டு வந்
திருப்பதாகவும், உடனே
அதை பெற்றுச் செல்லவேண்
டுமென்றும் அவனிடம் சொல்-
என்ன செய்து
கொண்டிருக்
கிறாய்?
மாடஸ்டியின்
இன்னொரு துப்
பாக்கியும்
தேவைப்பட்டது.
தரையை குறி
வைத்து சுடக்கூட
என்னால் முடியா
தென்று-மறுக்க
முடியாத உண்மை
தான் என்றாலும்—
மாடஸ்டி என்னைக்
கேலி செய்வதுண்டு-


இன்று துப்பாக்கியை கையாளத தீர்மானித்து விட்டேன்!
தன் கத்திகளையும், எடுத்து செருகிக் கொண்டார் கார்வின்—
அவளுக்காக உன் உயிரை, பலிகொடுக்கத் தீர்மானித்து விட்டாயா-மாண்டுபோனவள் மீண்டு வரப் போகிறாளா என்ன?
அவள் மீது உனக்கு அப்படி ஒரு வெறி— இல்லையா?
நீ நினைப்பது போல் அல்ல மர்லின்-ஆனால் வேறு விதத்தில்- இன்னும் அதிகமாக!
நான் போயாக வேண்டும்-நடந்தவைகளை கனவு என்று எண்ணி மறக்க முயற்சி செய் மர்லின் —
உன்னைப் போகவிட மாட்டேன்!
நீ செய்ய நினைப்பது முட்டாள்தனமானது!
போன் செய்து விபரத்தை ஸாமிடம் சொல்மறந்து விடாதே-விழித்தெழிந்ததும் முதல் காரியமாக அதைச் செய்!
விழித்தெழுந்ததுமா?
ஆமாம்- அப்படித் தான்!


விடிகாலை வேளையில் காரை சாலையை விட்டு விலக்கி நிறுத்தி பொறுமையின்றி காத்துக் கொண்டு நின்றார் கார்வின்–
அதோ–அந்த வண்டி ஏற்றது தான்!
ஏதாவது ரிப்பேரா?
கார்பரேட்டரில்- தகராறு!
சுலபமாக சரிசெய்து விடலாம்-
அது கிடக்கட்டும்– விடு- இதை கவனி!
இந்தா இருநூறு டாலர்கள்...
எதற்காக?



மறுகணம் அவனை ஒரே அடியில் வீழ்த்தினார் கார்வின்-
ணங்!
பிரம்மாண்டமான டிரக்கை ஓட்டிக் கொண்டு சென்ற கார்வின் ஏரிக்கரை பங்களா பாதையில் டிரக்கை திருப்பினார்—
அவர்கள் என்னை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கக்கூடும், என்பது தெரியும் இளவரசி! ஆனாலும் பரவாயில்லை!
பிரம்மாண்டமான பங்களாவில்—
கார்வின் லேசுப்பட்டவனல்ல...விழிப்போடு இருங்கள்...
அந்நாளில் செய்த அடிதடி வேலையை இன்னும் செய்ய நேரிடலாம். ஆனால் எட்டுப் பேர் சேர்ந்து ஒரு நபரை சமாளிப்பது அப்படியொன்றும் கஷ்டமான காரியமாக இராதுதான்!
அவனை உயிரோடு பிடிக்க விரும்புகிறேன்— கொன்று விடாதீர்கள்—
எல்லோருக்கும் தெரிவித்து விடுகிறேன்!



எத்திசையிலிருந்து வந்தாலும் 150 கஜ தூரம் திறந்த வெளியை கடந்துதான் அவன் கட்டிடத்தை நெருங்க முடியும்-நாற்புறமும் துப்பாக்கியோடு மறைந்து நிற்கிருர்கள் நம் ஆட்கள்..
அதே சமயம்—மாடஸ்டி லூமினர் ஹோட்டலே வந்தடைந்தாள்.
ஸாம்.. என்ன விவகாரம்?
பார்த்தாயா! மாடஸ்டியை கொன்று விட்டார்கள் என்று வற்புறுத்தினயே- நீயே பார்!
அ-அந்த ஆசாமி சொன்ஞன்-நீ செத்துப் போன தாக-நாங்கள்-நம்பி விட்டோம்-வில்லி-
சொல் மர்லின்—வில்லி?
உடனே வெளியேறி ஓடினர்-உன் மற்ருெரு துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு-
மர்லின் நடந்ததை விவரமாகச் சொல்ல-
உன் இரத்தம் தோய்ந்த ஸ்வெட்டரை பார்த்த கார்-வின் செய்தி நிஜம் தான் என்று நம்பி விட்டார்..
துப்பாக்கி-யையா? வில்லியா?
113




பழிவாங்க அவர் புறப்பட்டுச் சென் றிருக்கக் கூடும்- இந்த பொய்யை எதிரிகள் ஜோடனை செய்ததே வில்லியை வரவழைத்து தங்கள் வலையில் வீழ்த்தத்தான!
போலீஸாருக்கு போன் செய்து நகருக்கு வெளியே நம்மோடு சேர்ந்து கொள்ளுமாறு, உத்தரவிடுகிறேன்!
வில்லி புறப்பட்டுச் சென்று எவ்வளவு நேரம் ஆகியிருக் கும் மார்லின்?
சரியாக தெரியவில்லை- ஒருமணி- இருக்கலாம்!
கேப்ரியலின் ஆட்கள் எத்தனை பேர்?
எட்டு-ஒன்பது- கார்வினை உயி ரோடு கட்டிடத் தினுள் நுழை வது கூட சாத்தியமில்லை!
அவர் எப்படியும் நுழைந்து விடுவார்- அது மட்டுமல்ல- கேப்ரியலை கொன்று தீர்க்கும்வரை எப் படியும் தன் உயிரை காப்பாற் றிக் கொண்டுவிடு வார்- அவருடைய இலட்சியம் இப்போ தைக்கு அது தானே!
இந்நேரம் கார்வின், கேப்ரியலின் பங்க ளாவை சென்றடைந்து விட்டிருக்கக் கூடும்-
நாம் போய்ச் சேரும்வரை விபரீதம் நிகழா தவரை சரி!
கேப்ரியலின் ஆட்கள் கார் வினை எதிர் பார்த்து காத் துக் கொண்டி ருந்தார்கள்.
அவன் எந்த வினா- டியும் வந்து சேரலாம்!
திறந்த வெளி யிலேயே அவனை முடமாக்கி விழச் செய்துவிட முடியும்!


ஹே-டிரக் ஒன்று வருகிறது-நீங்கள் ஏற்பாடு செய்திருந் தீர்களா . பாஸ்!
இல்லேயே!
முட்டாள்களா-சுடுங்கள்! வருவது கார்வின் தான்!
பாச்சா பலிக்காது-தம்பிகளா!
டிரக் ஜன்னல் ஒன்றின் மீது மோதி தகர்த்தபோது கர்ணம் அடித்து வெளியில் குதித்தார் கார்வின்


டம்-டமார!!
டிரக்கின் அடியில் தவழ்ந்து பங்களா வினுள் நுழைந் தார்—
ஒருவனை கொன்று விட்டேன்!
இங்கே புகுந்து உள்ளேர முயற் சிக்கிறான்-அவனை கவனி!
இரண்டு துப்பாக்கிகள் ஒரு சேர முழங்கின—
டுமீல்! டுமீல்!
கிரிஸியரை கொன்று விட்டான்!


துப்பாக்கியை கையாள எனக் குத் தெரிந்து விட்டது- இளவரசி!
அந்தக் கதவின் பின்னலிருக்கிருன்- வெளியே தலே நீட்டியதும் சுடு!
ஆனல் கார்வின் வேறு பக்கமாக நகர்ந்து கொண் டிருந்தார்.
இம்முறையும், துப்பாக்கியை பயனபடுத்தி என் அதிர்ஷ் டத்தை சோதிக் கப் போவதில்லே!
இரண்டு பேரை வீழ்த்தி விட் டேன - இளவரசி!
இன்னும் அந்த அறையினுள் கார்வின் இருப் பதாக நம்பிக் கொண்டிருந் தனர்-எதிரிகள்!
லெரி-வெளியே போய்-பின்புற மாக வந்து மடக்கு!
சரி-பாஸ்!
ஆனல் கார்வின் ஏற்கனவே லெரி யின் பாதையில் மறைந்திருந் தார்-


ஜன்னல் வழியே கவனித்துக் கொண்டிருந்தேன்-லெரியின் நடமாட்டமே தென்படவில்லையே!
கார்வின் அவனையும் வீழ்த்தியிருக்கக் கூடும்!
கார்வின் அங்கே உள்ளே ஒளிந்திருக்க வேண்டும்!
மயங்கிக் கிடந்த லெரியின் உடலை ஒரு ட்ராலியின் மீது ஏற்றினான் கார்வின்
இவனை சுட்டுக் கொல்லும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைக்கப் போகிறேன்!
உன்னை தீர்த்துக் கட்ட வந்து கொண்டிருக்கிறேன்- கேப்ரியல்!
இதோ!
மின்னல் வேகத்தில் அறையிலிருந்து வெளிப்பட்டு ஹாலினுள் பாய்ந்த டிராலியை குறிவைத்து ஏகப்பட்ட தோட்டாக்கள் சீறிக் கொண்டு வந்தன...


டுஷ்!
அதே கணத்தில் இரு துப்பாக்கிகளையும் முழக்கிக் கொண்டு ஹாலினுள் பிரவேசித்தார் கார்வின ..
ஐந்து பேரை வீழ்த்தியாகி விட்டது
விடாதே- ரிக்கோ அவனைத் தீர்த்துக் கட்டு!
ஆஆ.. ஹ்!
ரிக்கோ செத்து விழுந்தான் ஆனால் அவனுடைய துப்பாக்கியிலிருந்து வெளியேறிய தோட்டாக்கள் கார்வினின் காலில் பாய்ந்து விட்டன!
கீழ் தளத்தில் கேப்ரியலின் சகா, யாருமே உயிரோடு இல்லை. காலில் குண்டு பாய்ந்ததால் ஏற்பட்டிருந்த வேதனையை பொறுத்துக் கொண்டு மாடிப் படிகளில் ஏறினார் கார்வின்.
இன்னும் ஒரு கட்ட போராட்டம பாக்கி இருக்கிறது- இளவரசி! வில்லி வெற்றியை முழுமையாக சாதிக்காமல் ஓய மாட்டான்-பாரேன்!
கேப்ரியல்-எங்கே பதுங்கிக் கொண்டிருக்கிறாய்-வா வெளியே! நீயா-நானா என்று பார்த்து விடலாம்.



ஒரு கையில் பாது காப்பு ஏற்பாடு- மறு கையால் தாக்குதல்-எப்படி என் யுக்தி?
சுவரின் மறைவில் துப்பாக்கி நுனி கண்ணில் படவே சுதா ரித்துக்கொண்ட கார்வின் அவனையும் சுட்டு வீழ்த்தினர்-
ஸ்கோர்- ஏழு!
எட்டு—!
டமார்!
குண்டடிப்பட்ட காயம் தனனை மிகவும் பலவீனப் படுத்திவிட்ட போ திலும், வலு- விழந்துபோன காலை மிகப்பிரயா சையோடு இழுத்த வாறு ஒவ்வொரு அறையாக நுழைந்து தேடி னர் கார்வின!
கேப்ரியல்!
வா-வெளியே- நீயும், நானும் தான் பாக்கி-


தன் சகாக்கள் அனைவரையும், கார்வின் கொன்று குவித்து விட்டதை நேரில் கண்ட கேப்ரியல் மிரட்சியடைந்து தப்பியோட முயன்றான் –
கேப்ரியல்! எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறாய்- உனக்காகத்தான் இந்த கத்தியை மிச்சப் படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறேன்!
விழிகள் சோர்வினால் செருகிக் கொள்ள, விசைப் படகு ஒன்று ஏரியினை குறுக்கே நீரைக் கிழித்துக் கொண்டு விரையும் ஓசையை கேட்டார் கார்வின் ...
அவனை கோட்டை விட்டுவிட்டேன் – என்னை மன்னித்துவிடு இளவரசி! நீ அருகில் இல்லாமல் என்னால் அதிகம் சாதிக்க முடியவில்லை!



போலிஸ் குழு தங்களை பின்தொடர்ந்து வர, மாடஸ்டியும, ஸாம் பார்த்தும் ஏரிக்கரையை நோக்கி காரில் விரைந்து வந்து கொண்டிருந்தனர்-
ஒருமணி நேரத்திற்கு முன்னதாகவே கார்வினைத் தீர்த்துக்கட்டிவிட்டு இப்போது நிதானமாக தங்களுடைய காலை சிற்றுண்டியை அவர்கள் சுவைத்துக் கொண்டிருந்தாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை! அடக்கடவுளே-பெரிய டிரக் ஒன்று சுவரில் மோதி பாதி உள்ளே நுழைந்த நிலையில் நிற்கிறது!
கார்வினை எதிர்பார்த்து அவர்கள் காத்துக் கொண்டிருந்திருப்பார்களாதலால் ஏந்த அசமபாவிதமும், நிகழ்ந்து விட்டிருக்கலாம்- மாடஸ்டி!
நான் சொன்னேனில்லையா, வில்லி எப்படியாவது உள்ளே நுழைந்து விடுவார் என்று!
வில்லி-வில்லி-நான்-மாடஸ்டி அழைக்கிறேன்!
என்ன கொடூரம் இது மிஸ்டர் பார்த்-இங்கே ஒரு இராணுவமே வந்து விட்டுப் போனதுபோல் காட்சியளிக்கிறது!
ஆமாம்-கார்வின் என்ற பெயரில்!


வில்லி— வில்லி — அன்பே!
எட்டுப் பேரை சவக்கிடங்கிற்கு அனுப்பிவிட்டிருக்கிறார் கார்வின் ஆனால் கேப்ரியலை காணவில்லை!
ஓ...!
இத்தக் கத்தியை கார்வின் அவனுக்காக மிச்சப்படுத்தி வைத்திருக்கக் கூடும்!
ஸாம்! இன்னும் நாடித் துடிப்பு இருக்கிறது!
மார்லையில்-ட்ரெமாண்டில் மருத்துவமனை ஒன்றில்-
இன்னும் இங்கேயே நின்று கொண்டிருக்கிறாயா, மிஸ் பிளேஸி? நீபோய் சற்று ஓய்வெடுத்துக் கொள்வது நல்லது!
அவனுக்கு ஒன்றும் ஆபத்தில்லையே— டாக்டர்?
ஸாம் பார்த் மருத்துவ மனைக்கு வந்து சேர்ந்தார்-
தோட்டாக்களை அப்புறப்படுத்தி விட்டோம்- நிரந்தர பாதிப்பு ஏதுமில்லை!
நிறைய இரத்த இழப்பு ஏற்பட்டிருப்பதால் மிகமிக பலவீனமாக இருக்கிறார்-



கேப்ரியல் இன்னும அகப்படவே யில்லே!
வீனஸில் நாங்கள் கைப் பற்றிய பைல்களே பார்வையிட அடுத்த வாரம இங்கே டர்ராண்ட் வரவிருக்கிருர். அதிமுக்கிய மான பல இரகசியங்களே உள் ளடக்கிய அந்த பைல்கள் உண் மையிலேயே தங்கச் சுரங்கம் தான்!
கார்வினே யாருமே கட்டுப் படுத்தி சொந்தம் கொண் டாட முடியாது என்று!
இன்னெரு செய்தி- மார்லின் கிளம்பிச் சென்று விட்டாள்- போகுமுன, நீ சொனைது நிஜ மாகி விட்டது என்று உன்னிடம் தெரிவிக் கச் சொன்னுன்-
நீ அப்படி என்னதான் அவளிடம் சொல்லி யிருந்தாய்?
வில்லி- நான்- மாடஸ்டி வந்திருக்கிறேன்- நான் செத்துப் போகவில்லே- இதோ உங்கள் அருகே நிற்கின்- றேன், என் வார்த் தைகளே கேட்டு, புரிந்து கொள்ள முயற்சி செய் யுங்கள்-ப்ளீஸ்!
பிழைத்துக் கொண்டு விடுவாரா?
உடலில் உரம் இருக்கிறது- வாழவேண்டும் என்ற ஆசை மட்டும் நெஞ்சில் உறுதியாக இருந் தால் நிச்சயம் பிழைத்துக் கொள்வார்!


இமைகள் மெள்ள அசைந்தன- கார்வினின் கை மாடஸ் டியின் கையை சற்று இறுக்க மாகப் பற்றியது.
ஓ-அவர் உன்னைப் புரிந்து கொள்ளச் செய்து விட்டாய் மிஸ் பிளைஸி!
இதோ நான் நலமாக இருக்கிறேன்- அவர்கள் என்னைக் கொன்று விட வில்லை! அவர்கள் சொன்னதும் அத் தனையும பொய் -புரிகிறதா-வில்லி!
இளவரசி!
ஹூம்-என்னை எப்படி யெல்லாம் வெறியாட் டம் போடத் தூண்டி விட்டார்கள் பாவிகள்!
கார்வினின் இமை கள் மீண்டும் சோர் வோடு மூடிக் கொண்டன...
விரைவிலேயே நீங்கள் பூரண குணமடைந்து விடுவீர்கள் வில்லி!
இப்போது ரொம்ப அசதியாக இருக் கிறது எல்லாம் சீக் கிரமே சரியாகி விடுகிறது!
இது நடந்து இரண்டு வாரங்களுக்குப் பின்-
நாடு திரும்ப விமானத்தை பிடிக்கச் செல்லுமுன் வில் லியைப் பார்த்து குட்பை சொல்லிச் செல்ல நேரம் கிடைத்ததற்கு மகிழ்ச்சியடை கிறேன்!
டாக்டர்களே வியப்படையும் அளவுக்கு வே கமாக குண- மடைந்து வருகிருர்!
முற்றும்.


அடுத்த வெளியீடு!
நீதிக் காவலன் ஸ்பைடர்!
ஆசிரியர்:
S.விஜயன்.
சூப்பர் சித்திரக் கதை


காமிக்ஸ்
பிரியர்களுக்கு
இது மறக்க
முடியாததொரு
விருந்து!
லயன்
காமிக்ஸ்
ரூ.
2-50
127



விரைவில் வருகிறது!
ஸ்பைடர் தோன்றும்
மிஸ்டர். மர்மம்
324பக்கங்கள்!
கண்ணாடி அட்டை!
தீபாவளி
மலர்!
மாடஸ்டி & கார்வின்
தோன்றும்
மரணப்பாதை!
உங்கள் அபிமான சாகஸ வீரர்கள்!
இரும்புக்கை உளவாளி
தோன்றும்
கொலைகார
அற்புத சித்திரக் கதைகள்!


C.I.D.லாரன்ஸ்& டேவிட் துப்பறியும்
ஆழ்கடல் யுத்தம்!
WAM
ஏவுகணை கடத்தல்!
இரட்டைவேட்டையர் சாகஸம்!
துப்பறியும் ஆர்ச்சி!
நவம்பர் 1ல் வருகிறது!

# வாசகர் கடிதம்!

- **கோல்டன் லெண்டிங் லைப்ரரி—ராணிப்பேட்டை**

  இது என்ன ஆண்டு மலரா?
  இல்லை—
  எங்களை ஆட்டி வைக்கும் மலரா?
  காட்டிலேயும் ராஜா சிங்கம் தான்
  காமிக்ஸிலேயும் ராஜா சிங்கம் தான்!

- **காழி. க. அருள்மொழி, நிம்மேலி.**

  அருமையானதொரு ஆங்கிலத் திரைப்படம் பார்த்த திருப்தியை தந்தது - ''பவளச் சிலை மர்மம்!''

- **சங்கர் கே, 253, சலிவன் வீதி, கோவை-1.**

  இரண்டாவது பிறந்தநாள் கொண்டாடும் சிங்கத்திற்கு
  இனிய நல்வாழ்த்துக்கள் கூறிடுவோம்.
  அரணாக நின்று காமிக்ஸ் உலகில்—
  அற்புதம் படைக்கும் சிங்கத்தின் ஆற்றலுக்கு
  இணையாக நின்று நாமும்—நமது காமிக்ஸ்
  துடிப்போடு விளங்க துணையாக நின்றிடுவோம்—நாம்
  இணைந்தே செயல்படுவோம்!

- **S. K. திவாகர்பாபு, பைகாரா.**

  ''பவளச் சிலை மர்மம்'' படு சூப்பர்! ஒவ்வொரு பக்கமும் விறுவிறுப்பாக இருந்தது தொடர்ந்து இம்மாதிரிக் கதைகளை வெளியிட்டு வாசகர்களை உற்சாகப்படுத்துங்கள்! லயன் காமிக்ஸ் வாழ்க! வாழ்க

- **P. தனபாலன், மதுரை-20**

  ''ஆண்டு மலர்'' மறக்க முடியாததொரு படைப்பு! மீண்டும் மாடஸ்டி பிளைஸி சாகஸம் செய்ய வருகிறார் என்ற அறிவிப்பு என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது!

- **K. K. ஐயப்பன், பூ மார்க்கெட், கோவை-1.**

  மூன்றுவது ஆண்டில் லயன் அடியெடுத்து வைக்கும் இந்நாளில் சிங்கக் குட்டிக்குப் பரிசாக அன்பையும், ஆதரவையும் வழங்கக் கடமைப் பட்டுள்ளோம்! நீங்கள் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் ''லயன்'' சூப்பர் ஸ்டார் தான்!

- **க. பாபு யோகேஸ்வரன், நல்லப்ப நாயக்கன்பட்டி,**

  வானத்து நிலவுகூட வளர்வதும், தேய்வதுமாக உள்ளது! ஆனால் லயன் காமிக்ஸ் புகழ் வளர்கின்றதே தவிர தேய்வதில்லை!

லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன்,
முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி - 626 123.
போன்: 1159. வெளியீடு எண்: 28. அச்சிட்டோர்:
முத்து பைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி - 626-123.



மர்ம எதிரி!
இரட்டை வேட்டையர்